# தமிழன்
THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 77 சுபகிருது வருடம், புரட்டாசி மாதம் 19ஆம் திகதி வியாழக்கிழமை (06.10.2022) ஹிஜ்ரி 1444, ரபிஉல் அவ்வல் - 09 0115886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50


## லிட்ரோ கேஸ் விலை குறைப்பு

(யோ.தர்மராஜ்)

லிட்ரோ எரிவாயுவின் விலை நேற்று நள்ளிரவுமுதல் குறைக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அதன்படி, லிட்ரோ 12.5 கிலோ எரிவாயு சிலிண்டரின் விலை 271 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 4,280 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 5 கிலோகிராம் லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை 107 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை ஆயிரத்து 720 ரூபாவாகும்.

02 பக்கம்

## பேராதனைப் பல்கலை கலைப் பீடாதிபதிக்கு கொலை மிரட்டல்

சில தொழிற்சங்கங்களைச் சேர்ந்த மாணவர்களிடமிருந்து தனக்கு கொலை மிரட்டல்கள் மற்றும் மிரட்டல் அழைப்புகள் வந்ததாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் பிரபாத் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

03 பக்கம்

# ஜெனீவா யோசனைகளை ஏற்கோம்!

## அரசு அறிவிப்பு அலி சப்ரி விளக்கம்



(யோ.தர்மராஜ்)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடரில் 30 நாடுகளின் இணை அனுசரணையுடன் ஐக்கிய இராச்சியம், இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா, ஜேர்மனி உள்ளிட்ட நாடுகள் இணைந்து முன்வைத்துள்ள புதிய யோசனையை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்பதோடு, அந்த யோசனையில் 8ஆவது சரத்தையும் முற்றாக எதிர்ப்பதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

அத்தோடு, மனித உரிமைகள் பேரவையில் எவ்வாறான பிரதிபலன் கிடைத்தாலும் எங்களுடைய அரசியலமைப்பை நாங்கள் ஒருபோதும் காட்டிக் கொடுக்க முடியாது. எங்களால் வல்லரசு நாடுகளுடனும் மோதமுடியாது. எனினும், எங்களுடைய சுயாதீனம் மற்றும் அரசியலமைப்பைப் பாதுகாப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் முன்னெடுப்போம் எனவும் அவர் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் கலந்துகொள்ள ஜெனீவா சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, நிகழ்நிலை ஊடாக...

02 பக்கம்



## இலங்கைக்கெதிரான 19 அம்ச தீர்மானங்கள்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் இலங்கை தொடர்பான முக்கிய குழு, இலங்கை தொடர்பில் 19 அம்ச தீர்மானத்தை முன்வைத்துள்ளது.

இந்த வரைவுத் தீர்மானம் ஐக்கிய இராச்சியத்தின் தலைமையில் அமெரிக்கா, வட அயர்லாந்து, மொண்டினீக்ரோ, வடக்கு மெசிடோனியா, அல்பேனியா, அவுஸ்திரேலியா, ஒஸ்திரியா, பெல்ஜியம், பொஸ்னியா மற்றும் ஹெர்சகோவினா, பல்கேரியா, கனடா, ...

03 பக்கம்

## ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் பொருளாதாரம் பேச அதிகாரமில்லை

### வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி விசனம்

(யோ.தர்மராஜ்)

மனித உரிமைகள் பேரவையானது மனித உரிமைகள் தொடர்பாக மாத்திரம் பேசவேண்டுமே தவிர, இலங்கையில் இடம்பெற்ற பொருளாதார குற்றங்கள் தொடர்பாக பேசுவதற்கு அதிகாரமில்லை. ஆனால், இலங்கையில் பொருளாதார மறுசீரமைப்புகளை முன்னெடுக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டு, உரிய தரப்புடன் இணைந்து செயற்படுவதாகவும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

ஐ.நா. மனித...

02 பக்கம்

## பொருளாதார நெருக்கடி மனித உரிமை விவகாரங்களில் தாக்கம்

### ஐ.நாவின் புதிய தீர்மானத்தில் கவலை

பொருளாதார நெருக்கடி மனித உரிமை விவகாரங்களில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து மனித உரிமைகள் பேரவையின் புதிய தீர்மானம் கரிசனை வெளியிட்டுள்ளது.

அதிகரித்த உணவு பாதுகாப்பின்மை, கடும் எரிபொருள் தட்டுப்பாடு, மருந்துப் பொருட்களுக்கு பற்றாக்குறை, குடும்பங்களின் வருமானம் குறைவடைந்தமை போன்றவற்றால் உருவாகியுள்ள பொருளாதார நெருக்கடி மனித உரிமைகள் மீது ஏற்படுத்தக்கூடிய தாக்கம் குறித்து மனித உரிமைகள் பேரவை...

02 பக்கம்

## முதலிகேவால் சபையில் அமளி

(யோ.தர்மராஜ்)

அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகேவின் கைது மற்றும் தடுத்துவைத்துள்ள விடயம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் ஆளுந்தரப்பு பிரதான கொறடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கும் இடையில் சபையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

02 பக்கம்

## மீனவர் போராட்டத்தின் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகை வீச்சு





### முல்லைத்தீவில் பதற்றம்

முல்லைத்தீவு நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள மீனவர்களைக் கலைக்க பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகங்களை மேற்கொண்டுள்ளனர்.

02 பக்கம்

## கோபா குழு எதிர்க்கட்சி வசம்: தலைவரானார் கபீர் ஹாசிம்

(யோ.தர்மராஜ்)

எதிர்க்கட்சியின் கோரிக்கைக்கமைய, அரச கணக்குகள் பற்றிய கோபா குழுவின் தலைவராக எதிர்க்கட்சி உறுப்பினர் கபீர் ஹாசிம் வாக்கெடுப்பின்றி தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அரச கணக்குகள் பற்றிய குழுவான கோபா குழுவுக்கான பெயர்கள் கடந்த திங்கட்கிழமை பெயரிடப்பட்ட நிலையில், நேற்று முதல் தடவையாக நாடாளுமன்ற வளாகத்தில் அக்குழு கூடியது.

02 பக்கம்

## சுற்றுலாப் பயணிகளுக்கு எரிபொருள் அனுமதிச்சீட்டு


(யோ.தர்மராஜ்)

இலங்கைக்கு விஜயம் செய்யும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான எரிபொருள் அனுமதிச்சீட்டு வழங்கும் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ சபையில் தெரிவித்தார்.

02 பக்கம்

## நாட்டில் இவ்வருடம் மது பாவனை வீழ்ச்சி

02 பக்கம்



## தேசிய சபை உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்தார் ஜீவன் எம்.பி.

### வெற்றிடத்துக்கு இராமேஸ்வரன் நியமனம்

(யோ.தர்மராஜ்)

நாடாளுமன்ற உறுப்பினர்களைக்கொண்டு நியமிக்கப்பட்டுள்ள தேசிய சபையின் உறுப்பினர் பதவியிலிருந்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் விலகியுள்ள நிலையில், அந்த வெற்றிடத்துக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி இராமேஸ்வரன்...

02 பக்கம்

## 22இற்கு பெரமுனவுக்குள் கருத்து முரண்பாடு

### பல தரப்பும் பரஸ்பர நிலைப்பாடு

(யோ.தர்மராஜ்)

நாடாளுமன்றத்தில் இன்றும் நாளையும் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள 22ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தில் தெரிவுக்குழு சந்தர்ப்பத்தில் புதிய திருத்தங்களை உள்ளடக்கினால், ஆளுந்தரப்பிலுள்ள பலர் வாக்களிக்காதிருப்பதற்கு...

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..

ஜெனீவாவும் ஏதோ சொல்லிக்கொண்டிருக்குது... நாங்களும் ஏதோ கேட்டுக்கொண்டிருக்கிறம்..!



## புதிய திருத்தங்களின்றேல் 22இற்கு ஆதரவளிக்கத் தயார்

### விமல் வீரவங்ச தெரிவிப்பு

(யோ.தர்மராஜ்)

உயர் நீதிமன்றம் முன்வைத்த திருத்தங்களுடன் 22ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றினால் அதற்கு ஆதரவாக உத்தர லங்கா சபாகயவை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிக்கத் தயாராக இருப்பதாக அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவங்ச தெரிவித்துள்ளார்.

பொரளையிலுள்ள ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற உத்தர லங்கா சபாகயவின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், மறைமுகமான வழிமுறையைப் பின்பற்றி...

02 பக்கம்




ஜனாதிபதி ரணில் இன்று நாட்டு மக்களுக்கு விசேட உரையொன்றை ஆற்றவுள்ளாரென தகவல்.

நாட்டின் பொருளாதார நிலைமை, தனது வெளிநாட்டுப் பயணம் உட்பட்ட பல விடயங்களை ரணில் தனது உரையில் விரிவாக விளக்குவாரென தெரிகிறது.

## 22 இற்கு பெரமுனவுக்குள்...

தீர்மானித்துள்ளதாக முக்கிய உறுப்பினர் ஒருவர் 'தமிழன்' செய்திகளிடம் நேற்றிரவு தெரிவித்தார்.

இதேவேளை, 22ஆவது திருத்தத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு முயற்சிப்பதாகவும் ஆனால், ஆளுந்தரப்புக்குள்ளே பலர் அதனை தடுப்பதற்கான முயற்சிகளை எடுப்பதால் என்ன நடக்குமென்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டியுள்ளதாக நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, 'தமிழன்' செய்திகளிடம் நேற்று தெரிவித்தார்.

22ஆவது திருத்தம் குறித்து ஆளுந்தரப்புக்குள் கருத்து முரண்பாடுகள் இடம்பெற்றுள்ளதால், அது குறித்து நேற்று நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ மற்றும் ஆளுந்தரப்பு உறுப்பினர்களுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது, அரசியலமைப்பு திருத்தம் அவசியமில்லையென ஆளுந்தரப்பு சுட்டிக்காட்டியபோது, அரசியலமைப்பில் திருத்தம் கொண்டுவருவதாக நாங்கள் மக்களுக்கும் சர்வதேசத்துக்கும் உறுதியளித்துள்ளதால், அதனை நாங்கள் நிறைவேற்ற வேண்டும். அவ்வாறில்லையேல், ஜி.எஸ்.பி. வரிச் சலுகை இல்லாது போகலாம் மற்றும் பல நாடுகள் எங்களுக்கு எதிராக தடை விதிக்கவும் வாய்ப்புள்ளதாக நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியலமைப்பு திருத்த கொண்டுவர வேண்டுமாயின், உயர் நீதிமன்றத்தினால் முன்வைக்கப்பட்ட திருத்தங்களுக்கு அமைய 22ஆவது திருத்தத்தை கொண்டுவர வேண்டும். அதனை விடுத்து, தெரிவுக்குழு சந்தர்ப்பத்தில் புதிய திருத்தங்களை உள்ளடக்குவதற்கு முயற்சித்தால் ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் அனைவரும் 22ஆவது திருத்தத்திற்கு வாக்களிக்காதிருப்போம் என இதன்போது சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, இது குறித்து நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கருத்து தெரிவித்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பொதுச் செயலாளர் சாகர காரியவசம்,

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை நீக்கப்படுமாயின், பிரிவினை வாதங்களுக்கு இடமளிக்கும் வகையிலும் பெடரல் (சமஷ்டி) ஆட்சிக்கு இடமளிக்கும் வகையில் இருக்கக் கூடாது என்பதே எங்களுடைய எதிர்பார்ப்பாகும். நாடாளுமன்றத் தேர்தல் முறை திருத்தத்துக்கு சமமான முறையில் மாத்திரமே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையில் திருத்தத்தை முன்னெடுக்க வேண்டும். மாறாக, நிறைவேற்று அதிகாரத்தை குறைத்த 19ஆவது திருத்தத்தினால் நாட்டுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை நாங்கள் நன்றாக கண்டுள்ளோம்.

ஏப்ரல் தாக்குதல் நடந்தபோது, அதற்கு பொறுப்புக் கூறுவதற்கு ஒருவரும் இருக்கவில்லை. ஜனாதிபதியும் பிரதமரும் தனக்கு தெரியாது எனக் கூறியதுடன், பாதுகாப்பு அமைச்சர், பொலிஸ்மா அதிபர் என அனைவரும் பொறுப்பைத் தட்டிக்கழித்தனர். இதுவே, 19ஆவது திருத்தம் நாட்டுக்கு ஏற்படுத்திய பாதிப்புகளாகும். இதனாலேயே 19 ஆவது திருத்தத்தை நீக்குமாறுக் கோரி முழு நாட்டு மக்களும் தங்களுக்கு 2/3 பெரும்பான்மை பலத்தை வழங்கினர்.

இந்நிலையில், 2 வருடங்களுக்கு பின்னர் தனிப்பட்ட ஒருவரின் தேவைக்காக மீண்டும் 19ஆவது திருத்தத்தை கொண்டுவருவதற்கு முயற்சித்தால், அதற்கு ஆதரவளிப்பதற்கு எங்களுக்கு பிரச்சினையுள்ளது. இதனாலேயே, 19ஆவது திருத்தத்தை மீண்டும் கொண்டுவருவது பிரிவினைவாதத்துக்கு ஊக்கமளிக்கும் செயற்பாடு என கட்சியிலுள்ள பலரும் சந்தேகிக்கின்றனர். இதேவேளை, நாட்டில் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வாழ்வதற்கான வழிகளையே மக்கள் கோருகின்றனர். மாறாக, மக்கள் அரசியலமைப்பு திருத்தத்தை கோரவில்லை என்றார்.

## சுற்றுலாப் பயணிகளுக்கு...

இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதற்கான சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டுள்ள நிலையில், போராட்டங்களை நடத்தி அதனை சீர்குலைத்துவிட வேண்டாம் என கைக்கூப்பி கேட்டுக்கொள்வதாக கோரிக்கை விடுத்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று ஆரம்பமான சபை அமர்வில் கலந்துகொண்டு, வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் சுற்றுலாத்துறை தொடர்பாக விளக்கமளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுற்றுலாப் பயணிகளை அழைத்துவருமாறு கூறுவதோடு, அதற்காக சுற்றுலா கருத்தரங்குகளையும் எதிர்க்கட்சியினர் நடத்துகின்றனர். ஆனால், நாடாளுமன்றத்தை கவிழ்ப்பதற்கும் அதனை சுற்றிவளைப்பதற்கும் முயற்சிக்கின்றனர். சம்மதமின்றி சுற்றுலா கூட்டத்தை நடத்தி, சுற்றுலாப் பயணிகளை அழைத்துவர வேண்டும் எனக் கூறுகின்றனர். ஆனால், மக்களுக்கு உண்ண உணவில்லை என சர்வதேசத்திடம் கூறுகின்றனர். அவ்வாறாயின் எவ்வாறு சுற்றுலாத்துறை வளர்ச்சியடையும்?

நாங்கள் கடந்த வாரத்தில் இந்தியாவிற்குச் சென்றிருந்தபோது, உங்களுடைய நாட்டு மக்களுக்கு உண்ண உணவிருக்கின்றதா? உங்களுடைய நாட்டில் எங்களுக்கு எரிபொருள் இருக்கின்றதா? உங்களுடைய மக்கள் எங்களை சுற்றிவளைத்துவிட்டால் எங்களால் மீண்டும் இந்தியாவிற்கு வரமுடியாது போகுமே என்றே எங்களிடம் இந்தியர்கள் கேட்டனர்.

ஒரு தரப்பினர் சுற்றுலாத்துறை வளர்ச்சியடையச் செய்யவேண்டும் எனக்கூறிக் கொண்டு, மறுப்பக்கத்தில் இலங்கையிலுள்ள மக்களுக்கு உண்ண உணவில்லையென, நாட்டில் தலைமைத்துவம் இல்லை என செய்திகளையும் பரப்புகின்றனர். இலங்கைக்கு எதிராக செய்திகளை பரப்பிய நாடுகளுக்குச் சென்று இலங்கை தொடர்பாக சாதகமான முறையில் செய்திகளை வெளியிடுவதற்கான முயற்சிகளை முன்னெடுக்கின்றோம்.

இந்நிலையில், எரிசக்தி அமைச்சரான காஞ்சனா விஜேசேகரவின் ஒத்துழைப்புடன் சுற்றுலா பயணிகளுக்கான எரிபொருள் அனுமதிச்சீட்டை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன்.

சுற்றுலாத்துறையில் உள்ளவர்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்ளும் வகையில் அவர்களுக்கு எரிபொருள் அனுமதிச் சீட்டு வழங்கும் திட்டமும் வழங்கப்படும். எரிபொருள் அனுமதிச் சீட்டுக்கு உரித்துடையவர்கள் கட்டாயம் சுற்றுலா சபையில் பதிவு செய்திருக்க வேண்டும்

இந்த நிலையில், நாசகாரர்கள் ஒருபக்கம் ஒதுங்கி நின்று நாடு மீண்டெழுவதற்கு இடம் கொடுத்தால், டிசம்பர் மாதத்தில் வரலாற்றில் இல்லாதவாறான சுற்றுலா பயணிகள் வருகை தருவார்கள் என நம்புகின்றேன்.

இலங்கை மக்களுக்கு கொத்து ரொட்டி 350 ரூபா என்பது பிரச்சினை என்றாலும் சுற்றுலா பயணிகளுக்கு அது பாரிய பிரச்சினையாக இருக்காது. கொத்து ரொட்டி 2 ஆயிரம் ரூபா என்றாலும் அவர்களுக்கு அது பிரச்சினையாக இருக்காது. இதேவேளை, கால்பந்து உலக கோப்பை தொடருக்கு வரும் நாடுகளுக்கு கட்டார் மற்றும் டுபாய் போன்ற நாடுகளில் தங்குவதற்கான நிதி பிரச்சினை இருப்பதால், பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ள நாடுகளை அவர்களுக்கு போட்டிகள் இல்லாத காலத்தை இலங்கையில் செலவிடுவதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்துவருகின்றோம்.

எனவே, இலங்கைக்கு சுற்றுலா பயணிகள் வருகை தருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில், போராட்டங்களை நடத்தி அதனை சீர்குலைத்துவிட வேண்டாம் என கைக்கூப்பி கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

## முதலிகேவால்...

அத்தோடு, வசந்த முதலிகேவின் உயிருக்கு ஆபத்து இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நாடாளுமன்றில் தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று ஆரம்பமான சபை அமர்வில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்திலேயே இந்த வாக்குவாதம் இடம்பெற்றது.

இது குறித்து கருத்து தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச,

வசந்த முதலிகே, கல்வெவ சிறிதம்ம தேரர் மற்றும் ஹசந்த குணதிலக்க ஆகியோர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, 90 நாள் தடுப்புக்காவலில் தங்கல்லை சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் சிறைப்படுத்தப்பட்டு, தற்போது 48 நாட்களுக்கு மேலாகியுள்ளது.

ஆனால், இவர்கள் செய்த தவறு என்ன? இந்த நிலையில், வசந்த முதலிகே சிறையில் இருந்து இரவு நேரங்களில் மல்வானை, கடவத்தை, கம்பஹா போன்ற பல்வேறு இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவதாகவும் அறிய முடிந்தது. பகல் வேளையில் இவ்வாறு அழைத்துச்செல்ல முடியாதா? இதனை நகைச்சுவையாகவும் எடுக்க வேண்டாம்.

இவ்வாறு அழைத்துச்செல்லப்பட்டு இறுதியில் ஏதோவொரு சம்பவம் இடம்பெற்று அல்லது சம்பவத்தை உருவாக்கி வசந்த முதலிகேவை கொலை செய்துவிட்டு, தப்பிச் செல்ல முற்பட்டதால் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக கூறுவார்கள். இது குறித்து, அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

இதேவேளை, கேஸ்பா சந்தியில் வைத்து, சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கூறி இவர்களை கைதுசெய்துள்ளனர். இவர்கள் செய்த சட்டவிரோத செயற்பாடுகள் என்ன? அரசாங்கத்தின் தவறுகளை சுட்டிக்காட்டி, பாதையில் இறங்கி, போராட்டங்கள் நடத்துவதற்கு பொது மக்களுக்கு உரிமையில்லையா? மாணவர்கள் வெளியில் இறங்கி தங்களுடைய கருத்துகளை தெரிவிக்கும்போது, அரசாங்கம் வன்முறையை பயன்படுத்துகின்றது. அவர்களின் நிலைப்பாடுகளை தெரிவிப்பதற்கு ஏன் இடமளிக்கவில்லை?

பயங்கரவாத செயற்பாடுகளை தடுப்பதற்கு நாட்டில் சட்டவிதிமுறைகள் அவசியம். அத்துகோரள எம்.பியின் படுகொலையும் பயங்கரவாத செயற்பாடாகவே நான் பார்க்கின்றேன். இவ்வாறான செயற்பாடுகள் நாட்டுக்கு எதிரான மனித உரிமைப் பிரேரணைகளுக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் இருக்கின்றன என்றார்.

இதற்கு பதிலளித்த ஆளுந்தரப்பு பிரதான கொறடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க,

வன்முறைகளுக்கு எதிர்ப்பு என்று கூறுகின்றீர்கள். ஆனால், பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பகிடிவதையினால் ஏற்பட்ட பாதிப்புகளை பற்றி பேசுவதில்லை. போராட்டக்காரர்களுக்கு இவர்களே கடந்த காலங்களில் ஆதரவு வழங்கினர். 600 இற்கும் மேற்பட்ட வீடுகளுக்கு தீ வைத்துள்ளனர். எதிர்க்கட்சியினரே அதற்கு தலைமைத்துவம் வழங்கினார்கள்.

பேராதனை பீடாதிபதிக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளன. நடிகர் தமிதா, எதிர்க்கட்சித் தலைவரின் கூட்டத்துக்குச் சென்றதால் போராட்டக்காரர்களுக்கு ஆதரவு வழங்க சஜித் முயற்சிக்கின்றார் - என்றார்.

## மீனவர் போராட்டத்தின்...

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் அதிகாரிகளை இடமாற்றக் கோரி முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அலுவலகத்தை முற்றுகையிட்டு, கடந்த 3 ஆம் திகதி முதல் முல்லைத்தீவு மாவட்டத்தின் 24 சங்கங்களைச் சேர்ந்த மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

எரிபொருள் கிடைக்காத நிலையில், பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் தொழிலுக்கு சென்று வருகின்ற மீனவர்கள், கடலில் இடம்பெறும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமது நிலைமையை புரிந்துகொள்ளாத அதிகாரிகள் சட்டவிரோத தொழிலுக்கு உடந்தையாகவுள்ளதாகவும் இவ்வாறான அதிகாரிகள் தமக்கு தேவையில்லை எனவும் அவர்களை உடனடியாக இடமாற்றம் செய்து தமக்கான ஒரு தீர்வினை வழங்குமாறு வலியுறுத்தியும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமது கோரிக்கைகள் அடங்கிய கடிதத்தை தேசிய கடற்றொழில் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ளதுடன், தமக்கான தீர்வுகள் கிடைக்கும் வரையில் தமது போராட்டம் தொடருமென அறிவித்த மீனவர்கள், கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்தின் நுழைவாயிலுக்கு அருகில் கூடாரம் அமைத்து தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், குறித்த மீனவர்கள் குற்றச்சாட்டுக்களை வைத்த கொக்கிளாய் சாலை பகுதிகளில் தென்பகுதியிலிருந்து வருகைதந்து மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ற மீனவர்கள் மற்றும் மாத்தளன் பகுதிகளில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் என சுமார் 300 பேரளவில் முல்லைத்தீவு பேருந்து நிலையம் அருகே மு.ப. 11 மணியளவில் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அதிகாரிகளை மாற்ற வேண்டாம் எனக் கோரி அவர்கள் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

இந்நிலையில், குறித்த மீனவர்கள் மற்றும் ஏற்கனவே போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற மீனவர்கள் இடையே முரண்பாடுகள் ஏற்படலாம் என்ற நிலையில், பொலிஸார் போராட்டக்காரர்கள் கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அலுவலகம் நோக்கி செல்லாத வகையில் முல்லைத்தீவு இலங்கை வங்கிக்கு முன்பாக ஒரு வீதித்தடையும் தொடர் போராட்டத்தில் ஈடுபடும் மீனவர்கள் ஆர்ப்பாட்டக்காரர்களை நோக்கி வரமுடியாத வகையிலும் ஒரு வீதித் தடையையும் ஏற்ப்படுத்தியிருந்தனர்.

இந்நிலையில், நேற்று அதிகாரிகளை மாற்ற வேண்டாம் எனக் கோரிய ஆர்ப்பாட்டக்காரர்கள் இலங்கை வங்கி முன்பாக அமைக்கப்பட்டிருந்த வீதித் தடைகளை உடைத்து கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அலுவலகம் நோக்கி செல்ல முற்பட்டபோது, அவர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகங்களை மேற்கொண்டனர்.

இதனையடுத்து தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்ற மீனவர்கள் வீதித்தடையை மீறி செல்ல முற்பட்டபோது பொலிஸார் அவர்கள் மீதும் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகை பிரயோகங்களை மேற்கொண்டனர். இதன்போது பாதிக்கப்பட்ட ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## ஜெனீவா யோசனைகளை...

கலந்துகொண்ட ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் நிறைவடைந்த பின்னர் இலங்கையில் நடைபெறும் அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் பல நாடுகள் இணைந்து பேசுகின்றன. அரசாங்கமும் ஆட்சியாளர்களும் மாறினாலும் அங்கு முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளில் எவ்வித மாற்றங்களும் இல்லை. தேசிய பொறிமுறைக்குள் தீர்வுகளை வழங்குவதற்கு முற்பட்டாலும் ஒரு சில தரப்புகள் அதில் திருப்தியடைவதில்லை. யுத்தத்தின்போது விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து மீட்கப்பட்ட 12 ஆயிரத்து 194 இளைஞர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. அவர்களை சந்தித்தபோது, தங்களுக்கு பொருளாதார ரீதியில் உதவுமாறு கோருகின்றனரே தவிர, சர்வதேசம் கூறுவதைப் போன்று அவர்கள் வேறு எதனையும் கோரவில்லை.

எது எவ்வாறாயினும் சுயாதீன பொறிமுறை ஒன்றை முன்னெடுப்பதற்கு அரசாங்கத்திற்கும் பொறுப்புள்ளது. அதனை நாங்கள் முன்னெடுத்து வருன்றோம். யுத்தத்துக்கு பின்னர் சிங்கள, தமிழ், முஸ்லிம் என அனைவரும் ஒன்றுமையாக வாழ்வதற்காக இராணுவமும், பொலிஸாரும் தங்களுடைய உயிரைத் தியாகம் செய்தனர்.

இதேவேளை, வட, கிழக்கில் இராணுவத்தினர் வசமிருந்த இடங்களில் 94 வீதமான இடங்கள் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. ஆனால், கனடா மற்றும் பிரித்தானியாவிலிருக்கும் புலம்பெயர்ந்தோர் (டயஸ் போராக்கள்) நாங்கள் என்ன செய்தாலும் அதில் திருப்தியடையாது, தங்களுடைய அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக எங்களுக்கு எதிராக புதிய புதிய குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர்.

இந்த நிலையில், 51ஆவது ஜெனீவா கூட்டத்தொடரிலும் எங்களுடைய கடும் எதிர்ப்புக்கு மத்தியில் யோசனைகளை முன்வைத்துள்ளனர். அதன்படி, இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா, ஜேர்மனி உள்ளிட்ட நாடுகள் இணைந்து எங்களுக்கு எதிராக புதிய யோசனையை முன்வைத்துள்ளன.

எனினும், இந்த யோசனைக்கு நாங்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளோம். குறிப்பாக, இந்த யோசனையில் 8ஆவது சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயமான, பொறுப்புக்கூறலை முன்னெடுத்துச் செல்வது தொடர்பாக இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல் மற்றும் அது தொடர்பாக குற்றச்சாட்டுகள் குறித்த சாட்சிகளை பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை அடையாளம் காணல், மனித உரிமைகள் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவிடம் சாட்சியங்களை முன்வைப்பதற்கும் அதனை பரிசீலனை செய்வதற்குமான வாய்ப்பை மேலும் பலப்படுத்தல், இலங்கையில் மனித உரிமைகள் மீறல் மற்றும் சர்வதேச மனித உரிமை சட்டங்களை மீறல் இடம்பெறுவதால் எதிர்கால பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கான மாற்றுவழிகளை பலப்படுத்தல், பாதிக்கப்பட்டவர்களுக்காக முன்னிற்றல் மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் நாடுகள் அடங்கலாக இடம்பெறும் நீதிமன்ற செயற்பாடுகளுக்கும் ஆதரவளிக்க வேண்டும் என்பதை நாங்கள் முழுமையாக எதிர்க்கின்றோம்.

குறிப்பாக, இலங்கையில் இடம்பெற்றுள்ளதாக கூறப்படும் குற்றச்சாட்டுகளுக்கு இலங்கை நீதிமன்ற செயற்பாடுகளை மீறி, சர்வதேச நீதிமன்ற செயற்பாடுகளுக்கு ஆதரவளித்தல் மற்றும் இராணுவத்தினரை சர்வதேச நீதிமன்றத்தின் முன் கொண்டுச் செல்வதற்கே முயற்சிக்கின்றனர். இதற்கு நாங்கள் ஒருபோதும் இணங்க முடியாது.

சர்வதேச நீதிபதிகள் இலங்கைக்கு வருவது என்பது எங்களுடைய அரசியலமைப்பை முற்றிலும் மீறுவதாக அமையும். எனவே, இந்த யோசனைக்கு இணங்கினாலும் எங்களால் செய்ய முடியாது - என்றார்.

## லிட்ரோ கேஸ்...

மேலும், 2.3 கிலோ லிட்ரோ எரிவாயு கொள்கலனின் விலை 48 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 800 ரூபாவாகும். இதேவேளை, நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் தொலைபேசி மற்றும் ஏனைய கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்ள அனைத்து தொலைத்தொடர்பு சேவை வழங்கல் நிறுவனங்களும் தீர்மானித்துள்ளன.

கடந்த முதலாம் திகதி முதல் சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி அமுல்படுத்தப்பட்டுள்ளதன் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தொலைதொடர்பு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

புதிய வரி 2.5 வீதத்தை சேர்க்கும்போது, தொலைக்காட்சி சேவைகள், முற்கொடுப்பனவு மற்றும் பிற்கொடுப்பனவு கட்டணப் பொதிகள் திருத்தப்படுவதாக நிறுவனங்கள் அறிவித்தன. புதிய கட்டண விபரங்கள் தத்தமது அதிகாரப்பூர்வ இணையதளங்களில் வெளியிடப்படும் என்றும் தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்கள் அறிவித்துள்ளனர்.

## பேராதனை...

பல்கலைக்கழக மாணவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கும் அவர்களின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கும் தாம் செயற்பட்டு வருவதாக பேராசிரியர் பிரபாத் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

எவ்வாறாயினும், பகிடிவதை சம்பவங்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மாணவர் சங்கங்கள் தம்மை அச்சுறுத்தி வருவதாக அவர் கூறினார்.

முன்னதாக, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தின் சட்டப் பிரிவுக்குள் மாணவர்களை அச்சுறுத்தவோ தாக்கவோ மாட்டோம் என்று மாணவர் சங்கங்கள் எழுத்துபூர்வமாக உறுதியளிக்கும் வரையில் கல்வி நடவடிக்கைகளை மீண்டும் தொடங்குவதில்லை என பேராதனைப் பல்கலைக்கழக நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த கலைப் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் பிரபாத் ஏக்கநாயக்க, பாதுகாப்புக் காரணங்களுக்காக பீடம் மூடப்பட்டுள்ளதாகவும், மாணவர்கள் தொடர்ந்து வகுப்புகளைப் பின்பற்றி வருவதாகவும் தெரிவித்தார்.

பகிடிவதையை எதிர்க்கும் மாணவர்கள் தாக்கப்பட மாட்டார்கள் என்றும், அவர்கள் துன்புறுத்தலுக்கு ஆளாகாமல் சகல பல்கலைக் கழக வசதிகளையும் பயன்படுத்த அனுமதிக்கப்படுவார்கள் என்றும் மாணவர் அமைப்புகளிடமிருந்து நிர்வாகம் உறுதியளிக்க வேண்டும் என்றும் பேராசிரியர் ஏக்கநாயக்க கூறினார்.

நிர்வாகம் இதுவரை உறுதிமொழியைப் பெறவில்லை என்றும் எனவே, அவர்கள் நேரில் கல்விப் பாடங்களை மீண்டும் தொடங்க மாட்டார்கள் என்றும் பேராசிரியர் பிரபாத் ஏக்கநாயக்க குறிப்பிட்டார்.

நிலைமை மாணவர்களுக்கு பயனுள்ளதாக இல்லை என்பதை ஒப்புக்கொண்ட அவர், இருப்பினும் எந்தவொரு தனிநபரின் பாதுகாப்பையும் சமரசம் செய்ய முடியாது என்பதை வலியுறுத்தினார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அண்மைய நாட்களில் மாணவன் ஒருவரின் மரணம் மற்றும் காணாமல்போன சம்பவங்கள் உட்பட பல சம்பவங்கள் பதிவாகியிருந்த நிலையில், தற்போது நிலைமை கட்டுப்பாட்டை மீறுமென நிர்வாகம் கவலையடைந்துள்ளது.

அதன்படி, சீரமைப்பு நடவடிக்கை எடுக்க நிர்வாகம் முடிவு செய்தது. வளர்ச்சியைத் தொடர்ந்து, நிர்வாகம், பேராசிரியர்கள் மற்றும் அதிகாரிகள் ஒரு குழு மாணவர்கள் மற்றும் அரசியல் கட்சி சார்பாளர்களால் அச்சுறுத்தப்படுகிறார்கள்.

## புதிய திருத்தங்களின்றேல்...

நாட்டுக்குபாதிப்பை ஏற்படுத்தக்கூடிய வகையிலான திருத்தங்களை கொண்டுவருவதற்கும் வாய்ப்புகள் உள்ளன. அவ்வாறு அரசாங்கம் செயற்படுமாயின் 22ஆவது திருத்தத்திற்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் மீள்பரிசீலனை செய்ய வேண்டியிருக்கும்.

எனவே, சமர்பிக்கப்பட்டுள்ள வரைபுக்கு உச்சநீதிமன்றம் முன்வைத்த திருத்தங்களைத் தவிர, வேறு நல்ல அல்லது வேறு திருத்தங்களை முன்வைக்க தெரிவுக்குழு நடவடிக்கையின்போது நடவடிக்கை எடுத்தால், எவ்வாறான முடிவுகளை எடுக்க வேண்டும் என்பது குறித்து சிந்திக்கலாம் என்றார்.

## தேசியசபை...

நியமிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபையில் அறிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று இடம்பெற்ற சபை அமர்வில் சபாநாயகர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய சபை உறுப்பினர் பதவியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் விலகியுள்ளார். அவர் விலகியதையடுத்து ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி இராமேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டளி சம்பிக்க ரணவக்கவும் தேசிய சபையில் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டில் இவ்வருடம்...

2021 ஆம் ஆண்டை விட 2022 ஆம் ஆண்டில் இலங்கையில் மது பாவனையில் குறிப்பிடத்தக்க குறைப்பு பதிவாகியுள்ளதாக தேசிய போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கை பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையில் 2021ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 215 மில்லியன் லீற்றர் மதுபானம் பயன்படுத்தப்பட்டுள்ளதாக அந்த பிரிவின் உப தலைவர் நளீன் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இந்த வருடம் ஜனவரி முதல் ஜூலை வரை மக்கள் 120 மில்லியன் லீற்றர் மதுபானங்களை மட்டுமே பயன்படுத்தியுள்ளதாக நளீன் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு சர்வதேச அமுத தினத்தின் போது மது பாவனை கணிசமான அளவு குறைக்கப்படுமென அமரசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கண்டியில் கடந்த திங்கட்கிழமை சர்வதேச மதுவிலக்கு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வுகளில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

## கோபா குழு...

இதன்போதே கோபா குழுவின் தலைவராக ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் கபீர் ஹாசிம் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இது குறித்து ஆளுங்கட்சி பிரதம கொறடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நாடாளுமன்றத்தில் நேற்று விசேட அறிப்பு ஒன்றையும் முன்வைத்திருந்தார்.

இதன்போது, ஜனாதிபதி மற்றும் பிரதமரின் ஆலோசனைக்கமைய அரச கணக்குகள் பற்றிய குழுவின் (கோபா) தலைவராக எதிர்க்கட்சி உறுப்பினர் கபீர் ஹாசிமை நியமிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் முக்கிய குழுக்களாக காணப்படும் கோப் மற்றும் கோபா குழுக்களின் தலைமைப் பதவிகளை எதிர்க்கட்சிக்கு வழங்குமாறு தொடர்ந்து கோரிக்கை விடுக்கப்பட்டதுடன், அதற்காக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கபீர் ஹசீம் மற்றும் எரான் விக்கிரமரத்ன ஆகியோரின் பெயர்களையும் எதிர்க்கட்சி முன்வைத்திருந்தது.

அதற்கமைய, கோபா குழுவின் தலைவராக கபீர் ஹாசிம் தெரிவு செய்யபபட்டுள்ளார். இதற்கு முன்னர் கோபா குழுவின் தலைவராக ஆளுந்தரப்பு தேசிய பட்டியல் உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண செயற்பட்ட போதிலும் இம்முறை அவரின் பெயரை ஆளுந்தரப்பு முன்வைக்கவில்லை.

இதேவேளை, 9ஆவது நாடாளுமன்றத்தின் 3 ஆவது கூட்டத்தொடரில் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப்) இன்று முதல் தடவையாக கூடவுள்ளது.

## பொருளாதார நெருக்கடி...

கரிசனை வெளியிட்டுள்ளது.

நாளாந்த ஊதியம் பெறுவோர், பெண்கள், குழந்தைகள், முதியோர் மற்றும் ஊனமுற்றோர் உட்பட மிகவும் பின்தங்கிய தனிநபர்களின் உரிமைகளை மேம்படுத்தி பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை மனித உரிமைப் பேரவை தீர்மானம் வலியுறுத்தியுள்ளது.

அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான வன்முறைகள், கைதுகள், அரசாங்க ஆதரவாளர்களுக்கு எதிரான வன்முறைகள், உயிரிழப்புகள், காயங்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்துகள் அழிக்கப்பட்டவை, சேதமாக்கப்பட்டவை உட்பட ஏப்ரல் 22க்கு பின்னர் உருவாகியுள்ள மனித உரிமை நிலைவரம் குறித்து மனித உரிமைப் பேரவையின் தீர்மானம் கவலை வெளியிட்டுள்ளது.

இந்த அனைத்து தாக்குதல்கள் குறித்தும் சுயாதீன விசாரணைகளை வலியுறுத்தியுள்ள தீர்மானம் குற்றவாளிகளாக காணப்படுபவர்கள் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## ஐ.நா.மனித உரிமைகள்...

உரிமைகள் கூட்டத்தொடரில் கலந்துகொள்ள ஜெனீவா சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் சட்டத்தரணி அலி சப்ரி, நிகழ்நிலை ஊடாக கலந்துகொண்ட ஊடக சந்திப்பில், மனித உரிமைகள் பேரவையில் இம்முறை இணைக்கப்பட்டுள்ள பொருளாதார குற்றச்சாட்டு குறித்து ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் பொருளாதார குற்றங்கள் இடம்பெற்றிருக்குமாக இருந்தால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும். தற்போது இலங்கை நீதிமன்றங்களில் வழக்குகளும் தொடரப்பட்டுள்ளன. இலங்கையில் பொருளாதார மறுசீரமைப்புகள் தேவை என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால், அதனை முன்னெடுப்பதற்கு மனித உரிமைகள் பேரவையில் எந்தவொரு நிபுணரும் இல்லை.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி போன்ற பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொருளாதாரம் தொடர்பாக அனுபவமுள்ளவர்கள் இருக்கின்றனர். அவர்களுடன் இணைந்து பொருளாதார மறுசீரமைப்புகளை முன்னெடுத்து வருகின்றோம். எனவே, மனித உரிமைகள் தொடர்பாகவே மனித உரிமைகள் பேரவை செயற்பட வேண்டும். எங்களை மனித உரிமை பேரவையின் கீழ் வைத்துக்கொள்வதற்கே அவர்களுக்கு தேவையில்லாத விடயங்களில் தலையிடுகின்றனர்.

பொருளாதார மறுசீரமைப்புகளை முன்னெடுப்போம். பொருளாதார குற்றவாளிகளுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுப்போம். ஆனால், அது குறித்து மனித உரிமைகள் பேரவை எவ்வித கருத்தையும் முன்வைக்க முடியாது. இதனாலேயே நாங்கள் எதிர்க்கின்றோம். இவ்வாறான தலையீடுகள் நிறுத்தப்படாது. காலம் செல்லும் போது, விளையாட்டிலும் தவறுகள் இருப்பதாகக் கூறுவார்கள். இதனாலேயே கொள்கை ரீதியிலும் செயற்பாட்டு ரீதியிலும் நாங்கள் எதிர்ப்புகளை வெளியிட்டு வருகின்றோம் - என்றார்.

# நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் தலைமையில் புதிய கூட்டணி உருவாகும்

## அதற்கான திறமையும், பக்குவமும் இருப்பதாக வடமத்திய மாகாணத்தின் முன்னாள் பிரதம அமைச்சர் பேஷல தெரிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் தலைமையில் புதிய அமைப்பொன்று உருவாக்கப்படுமென்றும் அதற்கான திறமையும் பக்குவமும் அவரிடம் இருப்பதாகவும் வடமத்திய மாகாணத்தின் முன்னாள் பிரதம அமைச்சர் பேஷல ஜயரத்ன தெரிவித்தார்.

இதுதொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்காலத்தில் தெளிவான மக்கள் அபிப்பிராயம் மற்றும் சிறந்த நிர்வாகத்தை உருவாக்கவேண்டியது மிகவும் அத்தியாவசியமான விடயமாகும். நாங்கள் தனியான குழுவென்ற அடிப்படையில், இந்த நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ளும் சகலரையும் ஒன்றிணைத்துக்கொள்ள எதிர்பார்த்துள்ளோம். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் தலைமையில் இந்த நாட்டைக் கட்டியெழுப்புவோம். அதேபோன்று இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான திறமையும் அவருக்கு இருக்கிறது. நவலங்கா சுதந்திரக் கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான குமார வெல்கம உள்ளிட்ட அனைவரும் ஒன்றிணைந்து புதிய குழுவை ஒன்றிணைத்துக்கொண்டு புதிய வேலைத்திட்டமொன்றை அமைப்போம்.

அதேபோன்று, எங்கள் அணியுடன் இந்த நாட்டைக் காட்டிக்கொடுத்த தலைவர்களை இணைத்துக்கொள்ளப் போவதுமில்லை. குறிப்பாக, சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தை முழுமையாக நிராகரிக்க நாங்கள் தீர்மானித்துள்ளோம்.

# மர்ஹூம் சுஐப் ஞாபகார்த்த கூட்டமும் நூல் வெளியீடும்





(பேருவளை பீ.எம்.முக்தார்)

தர்கா நகர் ஸாஹிராக் கல்லூரி முன்னாள் அதிபரும் கல்விமானுமான மர்ஹூம் ஐ.எல்.எம்.சுஐப் ஞாபகார்த்த கூட்டமும் "வாழும் ஆளுமை அல்ஹாஜ் ஐ.எல்.எம்.சுஐப்" எனும் நூலின் வெளியீட்டு வைபவமும் தர்கா நகர் ஸாஹிராக் கல்லூரி நளீம் ஹாஜியார் ஞாபகார்த்த மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

மொரட்டுவை பல்கலைக்கழக முன்னாள் கணிதத்துறை தலைவர் கலாநிதி எம்.இஸட்.எம்.மல்ஹருத்தீன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பேராதனைப் பல்கலைக்கழக விவசாய மற்றும் பொறியியல்துறை பேராசிரியர் எம்.ஐ.எம்.மௌஜூத், அக்கரைப்பற்று உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.ஏ.எம்.யூஸுப், எம்பிலிபிட்டிய தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன முன்னாள் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.பாரூக், பேருவளை இக்ரா தொழிற்பயிற்சி நிறுவனப் பணிப்பாளர் வை.ஐ.எம்.ரமீஸ், தர்கா நகர் அல்ஹம்ரா மகா வித்தியாலய முன்னாள் அதிபர் எம்.இஸட்.எம்.நயீம் ஆகியோர் உரையாற்றினர்.

விழாவில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம்.அஸ்லம் ஹாஜியார், பேருவளை நகர பிதா மஸாஹிம் முஹம்மத், பேருவளை பிரதேச சபை எதிர்க்கட்சி பிரதம அமைப்பாளர் ஏ.ஆர்.எம்.பதியுதீன், இலங்கை வங்கியின் இந்தியா கிளையின் முன்னாள் முகாமையாளர் கவிஞர் ரீ.எம்.ஸபா மேல்மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.எம்.எம்.அம்ஜாத் ஹாஜியார் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

நூலின் முதல் பிரதியை விழா ஏற்பாட்டுக் குழு உறுப்பினரும் சமூக சேவையாளருமான நிஸாம் ஹாஜியார் மர்ஹூம் ஐ.எல்.எம்.சுஐபின் மனைவியிடம் வழங்கினார்.





தம்பபண்ணி என்று அழைக்கப்படும் புத்தளம் மாவட்ட சாகித்திய விழா, புத்தளம் நகர மண்டபத்தில் நேற்று (05) நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்.பி.ஹேரத் கலந்துகொண்டார். கலைத்துறையில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு கேடயமும், சான்றிதழ்களும் இதன்போது வழங்கப்பட்டன. அத்துடன், மூத்த கலைஞர்களுக்கு புத்தளம் மாவட்டத்தில் உயர் விருதான "கலாதினி" விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. கலாதினி விருதை ஆறு கலைஞர்கள் பெற்றுக்கொண்டனர். (உடப்பு செய்தியாளர்)











பிரபல கலைஞர் லிங்கநாதன் தர்ஷன் தர்மராஜின் இறுதிக்கிரியை நேற்று (05) இறக்குவானையில் இடம்பெற்றது. அன்னாரின் பூதவுடல் இறக்குவானை பொதுமயானத்தில் தகனம் செய்யப்பட்டதுடன், இதில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டிருந்தனர்.

# உணவு ஒவ்வாமையினால் 17 சிறுவர்கள் மருத்துவமனையில் சேர்ப்பு

புத்தல, வெல்வத்த பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றில் ஐந்தாம் வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் 17 பேர் உணவு ஒவ்வாமை காரணமாக வெல்லவாய ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாடசாலையில் நேற்று (05) பெற்றுக்கொடுக்கப்பட்ட உணவை உட்கொண்டதன் பின்னரே மாணவர்கள் இவ்வாறு சுகயீனமுற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனைத் தொடர்ந்து மாணவர்களை வைத்தியசாலையில் சேர்க்க விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இவ்வாறு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மாணவர்கள் சகலரும் வெல்லவாய வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுள்ளனர்.

## இலங்கைக்கெதிரான...

குரோஷியா, சைப்ரஸ், செக்கியா, டென்மார்க், எஸ்டோனியா, பின்லாந்து, ஜெர்மனி, கிரீஸ், ஐஸ்லாந்து, அயர்லாந்து, இத்தாலி, லத்துவியா, லிச்சென்ஸ்டீன், லிதுவேனியா, லக்சம்பர்க், மலாவி, மொல்டாவா, நெதர்லாந்து, நியூசிலாந்து, நோர்வே, போர்த்துக்கல், ருமேனியா, ஸ்லோவேக்கியா, ஸ்லோவேனியா, சுவீடன், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளின் அனுசரணையை பெற்றுள்ளது.

இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் உண்மை, நீதி, நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் ஆகியவற்றை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பான ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் செயற்பாடுகளை பாராட்டி இந்த வரைவு தீர்மானம், 19 விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

1. மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது அமர்வில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் சமர்ப்பித்த வாய்மொழிப் புதுப்பிப்பு மற்றும் அதன் தற்போதைய அமர்வில் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் அறிக்கை ஆகியவற்றை வரவேற்கிறது.

2. உயர்ஸ்தானிகர் அலுவலகம் மற்றும் மனித உரிமைகள் பேரவையின் சிறப்பு நடைமுறைகளுடன் இலங்கை அரசாங்கத்தின் ஈடுபாட்டை வரவேற்கிறது, அத்தகைய ஈடுபாடு மற்றும் உரையாடலைத் தொடர ஊக்குவிப்பதுடன், இலங்கையின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துமாறு கேட்டுக்கொள்கிறது.

3. உணவுப் பாதுகாப்பின்மை, எரிபொருளில் கடுமையான தட்டுப்பாடு, அத்தியாவசிய மருந்துப் பற்றாக்குறை மற்றும் வீட்டு வருமானம் குறைப்பு போன்றவற்றின் விளைவாக பொருளாதார நெருக்கடியின் மனித உரிமைகள் தாக்கம் பற்றிய கவலையை வெளிப்படுத்துகிறது. அதேநேரத்தில் தினசரி ஊதியம் பெறுபவர்கள், பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் மற்றும் விசேட தேவையுடைய நபர்கள் உட்பட மிகவும் பின்தங்கியவர்களின் உரிமைகளை மேம்படுத்தி பாதுகாக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது.

4. 2022, ஏப்ரலில் இருந்து மனித உரிமை முன்னேற்றங்கள், அமைதியான போராட்டக்காரர்களுக்கு எதிரான வன்முறை மற்றும் கைதுகள், அத்துடன், அரசாங்க ஆதரவாளர்களுக்கு எதிரான வன்முறை, இதன் விளைவாக மரணங்கள், காயங்கள், அழிவு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கு சேதம் விளைவித்தல் மற்றும் அனைத்து தாக்குதல்களிலும் சுயாதீன விசாரணைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதுடன், பொறுப்பானவர்கள் கருத்திற்கொள்ள வேண்டும் என்று கோருகிறது.

5. சிவில் அரசாங்க செயல்பாடுகளை இராணுவமயமாக்கலில் இருந்து பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் பொறுப்பான நீதித்துறை மற்றும் முக்கிய நிறுவனங்களின் சுதந்திரத்தை நிவர்த்திசெய்வது, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் குறைகள், கோரிக்கைகள் நீடித்த உள் இடப்பெயர்ச்சி, நில தகராறுகள், ஊடகவியலாளர்கள், சிவில் சமூக ஆர்வலர்கள், மனித உரிமைப் பாதுகாவலர்கள், காணாமல் போனவர்களின் குடும்பங்கள் மற்றும் நினைவேந்தல் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் மீது மேற்கொள்ளப்படும், கண்காணிப்பு, அச்சுறுத்தல் மற்றும் துன்புறுத்தல் மற்றும் பாலியல், பாலின அடிப்படையிலான வன்முறையை எதிர்த்துப் போராடுவதற்கு ஊக்கமளிக்கிறது.

6. தமிழீழ விடுதலைப் புலிகளின் துஷ்பிரயோகங்கள் உட்பட அனைத்து தரப்பினராலும் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து மீறல்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு விரிவான பொறுப்புக்கூறல் செயல்முறையின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகிறது.

7. சுயாதீனமான, பாரபட்சமற்ற மற்றும் வெளிப்படையான உள்நாட்டுப் பொறிமுறைகளின் தொடர்ச்சியான தவிர்ப்பை அறிக்கை குறிப்பிடுகிறது, மேலும் மனித உரிமைகளின் பாரதூரமான மீறல்களுக்கான விசாரணைகள் மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.

8. பொறுப்புக்கூறலை மேம்படுத்தும் நோக்கில் இலங்கையில் மனித உரிமை மீறல்கள், துஷ்பிரயோகங்கள் தொடர்புடைய குற்றங்களின் ஆதாரங்களை பாதுகாத்தல் மற்றும் பகுப்பாய்வு செய்வதன் முக்கியத்துவத்தை அங்கீகரித்து, சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கீழ் கடுமையான மீறல்களுக்கு உறுப்புநாடுகளில் தகுதியான அதிகார வரம்புடன் ஒருங்கிணைக்கும் திறனை விரிவுபடுத்தவும் வலுப்படுத்தவும் உயர்ஸ்தானிகர் முடிவு செய்துள்ளார்.

9. அனைத்து சமூகங்கள் மற்றும் தலைமுறைகளை உள்ளடக்கிய இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த வெளிநாட்டவர்களுடன் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பை அறிக்கை வலியுறுத்துகிறது.

மேலும் பாதிக்கப்பட்ட அனைத்து சமூகங்களின் பங்குதாரர்களுடன் பரந்த அடிப்படையிலான ஆலோசனைச் செயல்பாட்டில் மேலும் ஈடுபடவும், அதற்கான தீர்வுகளை வழங்கவும் அர்த்தமுள்ள நல்லிணக்கம், அரசியல் அதிகாரப்பகிர்வு, மேம்பட்ட மனித உரிமைகள் மற்றும் நிலையான சமாதானத்தையும் தேட இலங்கை அரசாங்கத்தை ஊக்குவிக்கிறது.

10. அனைத்து மத சமூகங்களும் தங்கள் மதத்தை வெளிப்படுத்தும் திறனை ஊக்குவிப்பதன் மூலம் மத சுதந்திரம் அல்லது நம்பிக்கை மற்றும் பன்மைத்துவத்தை வளர்க்க இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துகிறது, மேலும் சமூகங்கள் மத்தியில் வெளிப்படையாகவும் சமமான நிலையிலும் பங்களிப்பை கோருகிறது.

11. முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஓரங்கட்டப்படுதல் மற்றும் அவர்களுக்கு எதிரான பாகுபாடுகளை நிவர்த்திசெய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு இலங்கை அரசாங்கத்தை தீர்மானம் வலியுறுத்துகிறது.

12. மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்கள் தொடர்பான அனைத்து குற்றச்செயல்களுக்கும், உடனடி, முழுமையான மற்றும் பக்கச்சார்பற்ற விசாரணையை பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகளின் முழு பங்கேற்புடன் உறுதிசெய்யுமாறு இலங்கை அரசாங்கத்திற்கு இந்த தீர்மானம் அழைப்பு விடுக்கிறது.

13. பொது மற்றும் முன்னாள் அரச அதிகாரிகள் செய்த ஊழல்கள் உட்பட ஊழல்களை விசாரிப்பது மற்றும் உத்தரவாதமளிக்கும் இடத்தில் வழக்குத் தொடுப்பது உட்பட தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணுமாறு இலங்கை அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறது.

14. காணாமல்போனவர்கள் தொடர்பான அலுவலகம் மற்றும் இழப்பீடுகளுக்கான அலுவலகம் ஆகியவற்றின் பயனுள்ள மற்றும் சுயாதீனமான செயல்பாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. அதேவேளை, பலவந்தமாக காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான பல வழக்குகளைத் தீர்ப்பது உட்பட, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பிற பங்குதாரர்களால் எதிர்பார்க்கப்படும் உறுதியான முடிவுகள் இன்னும் எட்டப்படவில்லை என்பதைக் குறிப்பிடுகிறது. காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் அவர்களின் தலைவிதி மற்றும் இருப்பிடம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பயனுள்ள மற்றும் சுயாதீனமான செயற்பாட்டின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ள முடியும். இந்த செயற்பாட்டை தீர்மானம் வலியுறுத்துகிறது.

15. மனித உரிமை பாதுகாவலர்கள் உட்பட சிவில் சமூக செயற்பாட்டாளர்களைப் பாதுகாக்க அவர்களுக்கு எந்தவொரு தாக்குதல்களையும் விசாரிக்கவும், சிவில் சமூகம் தடைகள், கண்காணிப்பு, பாதுகாப்பின்மை மற்றும் பழிவாங்கும் அச்சுறுத்தல் இல்லாமல் செயல்படக்கூடிய பாதுகாப்பான மற்றும் செயல்படுத்தும் சூழலை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு அது அழைப்பு விடுக்கிறது.

16. கடந்த 2022, மார்ச்சில் இருந்து பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் தடுப்புக் காவல்கள் தொடர்கின்றன, மேலும் பயங்கரவாதத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்க புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவது தொடர்பாக இலங்கை அரசாங்கத்தை தீர்மானம் வலியுறுத்துகிறது. இவ்வாறு தயாரிக்கப்படும் புதிய சட்டம் சர்வதேச நியமங்களுககேற்ப முழுமையாக இணங்குவதை உறுதி செய்யவேண்டும் என்று தீர்மானம் பரிந்துரைத்துள்ளது.

17. மனித உரிமைகள் பேரவையின் விசேட நடைமுறைகளுடன் இலங்கை அரசாங்கத்தின் தொடர்ச்சியான ஈடுபாட்டைப் பாராட்டுவதுடன், அவர்களிடமிருந்து நிலுவையிலுள்ள கோரிக்கைகளுக்கு முறையாகப் பதிலளிப்பது உட்பட அந்த ஒத்துழைப்பைத் தொடர அரசாங்கத்தை ஊக்குவிக்கிறது.

18. இதுவரை குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஆலோசனைகள் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை இலங்கை அரசாங்கத்துடன் கலந்தாலோசித்து இணக்கத்துடன் வழங்குவதற்கு தொடர்புடைய சிறப்பு நடைமுறை ஆணை வைத்திருப்பவர்களை உயர்ஸ்தானிகர் அலுவலகம் ஊக்குவிக்கிறது.

19. நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலில் முன்னேற்றம் மற்றும் மனித உரிமைகள் மீதான பொருளாதார நெருக்கடி மற்றும் ஊழலின் தாக்கம் உட்பட இலங்கையின் மனித உரிமைகளின் நிலைமையை கண்காணித்து அறிக்கையிடுவதை மேம்படுத்துமாறு உயர்ஸ்தானிகர் அலுவலகத்தை தீர்மானம் கோருகிறது. மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது மற்றும் 55ஆவது அமர்வுகளில் ஒரு வாய்வழி புதுப்பிப்பு மற்றும் அதன் 54ஆவது அமர்வில் எழுத்துப்பூர்வ புதுப்பிப்பு மற்றும் அதன் 57ஆவது அமர்வில் பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதற்கான கூடுதல் விருப்பங்களை உள்ளடக்கிய ஒரு விரிவான அறிக்கை மற்றும் ஊடாடும் உரையாடலையும், முக்கிய நாடுகளின் தீர்மானம் கோரியுள்ளது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஒக்டோபர் 06 ஆம் திகதி, வியாழக்கிழமை

# சிக்கித்தவிக்கும் உள்நாட்டு, உலக பொருளாதார நிலைமை!

அதிகரித்துள்ள பணவீக்கத்திற்கு இணையான கொடுப்பனவு, அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என ஒன்றிணைந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் மத்திய நிலையம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்து வெளியிட்ட அதன் பொதுச்செயலாளர் தம்மிக்க முனசிங்க, 2016 ஆம் ஆண்டுக்கு பின்னர் அரச உத்தியோகத்தர்களுக்கு வேதனம் அதிகரிக்கப்படவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

வாழ்க்கை செலவினம் தாங்க முடியாத அளவிற்கு உயர்ந்துள்ளது. உணவுப் பணவீக்கம் 80 சதவீதத்தினையும் கடந்துள்ளது. அண்மையில் இடைக்கால பாதீடு முன்வைக்கப்பட்ட போதிலும், அதில் எவ்வித ஒதுக்கீடுகளும் செய்யப்படவில்லை. எனவே, பணவீக்கத்திற்கான அரசாங்கத்தின் கொடுப்பனவை வழங்க வேண்டும்.

பொருட்கள் மற்றும் எரிபொருள் விலையினை குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என ஒன்றிணைந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் மத்திய நிலையத்தின் பொதுச்செயலாளர் தம்மிக்க முனசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் பொருளாதாரம் பின்னடைவை சந்தித்ததற்கு உள்நாட்டுப் பிரச்சினைகள் மட்டும் காரணமல்ல. சர்வதேச பொருளாதார நிலைமைகளும் அதற்கு தாக்கத்தை செலுத்தியுள்ளன. உக்ரைனில் நீடித்து வரும் போர், பெரும்பாலான நாடுகளின் வளர்ச்சிக் கணிப்புகளை கணிசமாகக் குறைத்துள்ளது. உலகளாவிய அளவில் உச்சம் தொட்டு வரும் பணவீக்கத்தால் மத்திய வங்கிகள் வட்டி விகித உயர்வை அறிவித்து வருகின்றன. இதனால், உலகப் பொருளாதாரம் மந்தநிலைக்குச் செல்லும் அபாயம் காணப்படுவதாக பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு (ஓ.இ.சி.டி.) அண்மையில் எச்சரித்தது.

உக்ரைன் மீதான போரைத் தொடர்ந்து, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், ரஷ்யா ஐரோப்பிய நாடுகளுக்கான எரிவாயு விநியோகத்தைக் குறைத்துள்ளது. அதனால் அந்த நாடுகளில் தொழில்துறை பாதிக்கப்பட்டிருக்கிறது.

ஜேர்மனி, இத்தாலி, இங்கிலாந்து உள்ளிட்ட முக்கிய ஐரோப்பிய நாடுகள் பொருளாதார மந்தநிலையை நோக்கி நகர்கின்றன. பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு, உலகளாவிய வளர்ச்சி முன்னறிவிப்பை 2.8 வீதத்தில் இல் இருந்து 2022 இல் 2.2 வீதமாகக் ஆகக் குறைத்துள்ளது. அதிகரித்து வரும் மக்கள்தொகைக்கு ஏற்ப உலகப் பொருளாதாரம் குறைந்தது 4 வீதம் வளர்ச்சியடைய வேண்டும். ஆனால், அது சாத்தியமில்லை.

ஐரோப்பிய பிராந்தியத்தில் யூரோ நாணயத்தைப் பயன்படுத்தி வரும் பெல்ஜியம், ஜேர்மனி, அயர்லாந்து, ஸ்பெயின், பிரான்ஸ், இத்தாலி, லக்ஸம்பர்க், நெதர்லாந்து, ஆஸ்திரியா, போர்ச்சுக்கல், பின்லாந்து, கிரீஸ், ஸ்லோவேனியா, சைப்ரஸ், மால்டா, ஸ்லோவாக்கியா, எஸ்டோனியா, லாட்வியா, லிதுவேனியா ஆகிய 19 நாடுகளின் வளர்ச்சி மொத்தத்தில் 3.1 வீதத்தில் இருந்து 2023இல் 0.3 வீதமாக குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மிகவும் வலுவான பொருளாதாரங்களும் கடும் சவால்களை எதிர்கொண்டு வருகின்றன. ஜேர்மனியின் பொருளாதாரம் அடுத்த ஆண்டு 0.7 வீதமாக சுருங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது கடந்த ஜூன் மதிப்பீட்டில் 1.7 வீதமாக இருந்தது. சீனாவின் வளர்ச்சி இந்த ஆண்டு 3.2 வீதமாக குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அது 1970க்குப் பிறகு சீனா மிகக் குறைந்த வளர்ச்சியைப் பதிவு செய்வதாக அமையும். இந்த ஆண்டு 1.5 வீதமாக உள்ள வல்லரசான அமெரிக்காவின் வளர்ச்சி, 2023இல் 0.5 வீதமாக குறையும் என்றும் வல்லுநர்கள் கணித்துள்ளனர்.

கடந்த மே மாத கணக்கின்படி பணவீக்கப் பட்டியலில் ரஷ்யா முன்னிலையில் (17.8 %) உள்ளது. இதற்கு அடுத்ததாக நைஜீரியா (16.8 %), போலந்து (12.4 %), பிரேசில் (12.1%), நெதர்லாந்து (9.6 %), பிரிட்டன் (9 %), ஸ்பெயின் (8.3 %), அமெரிக்கா (8.3%) உள்ளன. இந்தியா (7.8 %) ஒன்பதாவது இடத்தில் உள்ளது. பொருளாதாரத்தில் முன்னிலையில் உள்ள சீனாவின் பணவீக்கம் 2.1 வீதம். பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக பெரும்பாலான நாடுகளின் மத்திய வங்கிகள் வட்டி விகிதத்தை உயர்த்துகின்றன.

கடந்த வாரம் அமெரிக்க மத்திய வங்கியான பெடரல் ரிசர்வ் வட்டி விகிதத்தை 0.75 சதவீதம் உயர்த்தியுள்ளது. மேலும், வட்டி விகித உயர்வுகள் அறிவிக்கப்படலாம் என்றும் எச்சரித்துள்ளது. அமெரிக்க மத்திய வங்கியின் அளவுக்கதிகமான வட்டி விகித உயர்வுகள், 'ரிஷஸன்' என்று சொல்லப்படும் பொருளாதார மந்தநிலைக்கான அறிகுறியாகப் பார்க்கப்படுகிறது.

அமெரிக்க ஃபெடரல் வங்கி, இலங்கை மத்திய வங்கி உட்பட எல்லா மத்திய வங்கிகளும் தற்போது ஏற்பட்டிருக்கும் பொருளாதார வளர்ச்சி பாதிப்பை முன்கூட்டியே கணிக்கத் தவறிவிட்டன. அதனால், 2023 - 24 நிதியாண்டு இதுவரை இல்லாத அளவிலான பொருளாதாரத்திற்கு மந்தநிலை ஆண்டாக இருக்கும் என பல மதிப்பீடுகள் எச்சரிக்கின்றன.

பணவீக்கத்துக்கு எதிரான வட்டி விகித உயர் நடவடிக்கையில் மத்திய வங்கிகளின் கொள்கை முடிவுகளும் எந்த அளவுக்கு பொருளாதார வீழ்ச்சியைத் தடுத்துவிடும் என்பது தெரியவில்லை. அவை மேலும் சிக்கலை ஏற்படுத்தாமல் இருக்க வேண்டுமே என்பதுதான் மிகப் பெரிய கவலை.

'பணவீக்கத்தால் எதிர்கொள்ள நேரிடும் நெருக்கடியை சமாளிக்க முன்னெடுக்கப்படும் வட்டி விகித உயர்வுகள் உலகப் பொருளாதாரத்தை வேகமாக மந்தநிலைக்குத் தள்ளக்கூடும்' என்கிற உலக வங்கி எச்சரிக்கை கவனத்துக்குரியது. வட்டி விகித அதிகரிப்பு மக்களின் வாங்கும் சக்தியை குறைப்பதால் எதிர்பார்த்த பலனை அளிக்காமலும் போகலாம். வாங்கும் சக்தியை அதிகரிப்பதன் மூலம் மட்டுமே பொருளாதாரத்தை சுறுசுறுப்பாக்க முடியும் என்கிற கருத்தைப் புறந்தள்ளிவிட முடியாது.

அரச பணியாளர்களின் கொடுப்பனவு கோரிக்கை நியாயமானதுதான் என்றாலும் இப்போதைக்கு அதை செய்யும் நிலையில் இல்லை. உள்நாட்டு பொருளாதாரமும், உலக பொருளாதாரமும் பின்னடைவை சந்திருப்பதால் இவ்வாறான கோரிக்கைகள் நிறைவேற சில காலங்கள் எடுக்கும். அது எவ்வளவு காலம் என்பதுதான் தெரியவில்லை.

# சர்ச்சைக்குள்ளாகும் இந்து சமயம்!

முனைவர் வைகைச்செல்வன்

இந்து சமயம் பற்றி பலநூறு நூல்களும், பலநூறு ஆய்வுக் கட்டுரைகளும் பல்வேறு மொழிகளில் எழுதப்பட்டு வந்துள்ளன. இந்து நாகரிகம் பல்கலைக்கழகங்களில் பாடமாகக் கற்பிக்கப்பட்டு, அதைப் பயின்றவர்களுக்குப் பட்டங்களும் வழங்கப்படுகின்றன. ஆனாலும், இந்து மதம் குறித்து விவாதம் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. இந்து பண்பாட்டு மரபுகளில் இந்து சமயம் என்பதற்கான போதிய விளக்கங்கள் தரப்படவில்லை.

இந்து என்ற சொல்லானது பெரும் குழப்பத்திற்கு உள்ளாகிறதோ என்று தோன்றுகிறது. இந்த சொல் இந்தியா என்று கூறப்படும் நிலப்பகுதி மக்களால் பண்டைக் காலத்தில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதா? அப்படிப் பயன்படுத்தப்பட்டு வந்திருந்தால் அது என்ன பொருளில் பயன்படுத்தப்பட்டு வந்தது? இந்து என்ற சொல் குறிப்பிட்ட சமயத்தைக் குறிக்க பண்டைக் காலத்தில் பயன்படுத்தப்பட்டதா என்கிற கேள்வி எழுகிறது.

அப்படிப் பயன்படுத்தப்பட்டிருந்தால், அந்த சமயத்தினுடைய முழுமுதல் கடவுள் யார்? அந்த சமயத்தின் சித்தாந்தம் என்ன? அப்படிப் பயன்படுத்தப்படவில்லையென்றால், இந்து என்ற சொல் சமயத்தைக் குறிக்க எப்போது முதல் அடையாளப்படுத்தப்பட்டது என்கிற கேள்விகள் எழுகின்றன.

இந்து, இந்து சமயம், இந்து பண்பாடு இவை எப்போது எழுந்தன? எப்படி எழுந்தன? இதற்கான விளக்கங்களைத் தாருங்கள் என்று எவரையும் கேட்க முடியாது. தமிழ்நாட்டு மக்களில் பெரும்பாலோர் தம்மை 'சைவர்' என்று அடையாளப்படுத்திக்கொள்கின்றனர்.

இந்து சமயம் என்பது சைவம், வைணவம், பௌத்தம் எல்லாவற்றையும் உள்ளடக்கிய சமயம் என்று சிலர் விவாதித்தாலும் இவற்றையெல்லாம் சேர்த்து ஏன் இந்து சமயம் என்று குறிப்பிட வேண்டும் என்று கேள்வி எழுகிறது.

பல தேசங்களை ஒன்றிணைத்து அதற்கு 'இந்தியா' என்று பெயரிட்டு, அந்த இந்தியாவை ஆளும் வர்க்கத்திடம் கொடுத்துச் சென்ற பெருமை பிரித்தானியா காலனித்துவவாதிகளையே சேரும்.

ஏனென்றால், ஒற்றுமை உணர்வு அதில் ஓங்கி ஒலிக்கிறது. அமெரிக்கா, இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளின் ஆளும் வர்க்கங்களின் இயல்பான ஒற்றுமை உணர்வு அந்த நாடுகளின் உருவாக்கத்தில் கட்டுண்டு இருப்பதை நாம் காண முடியும்.

அவ்வப்போது கருத்து முரண்பாடுகள் எழுந்து கொண்டுதான் இருக்கின்றன. முதன்முதலாக 1787-ஆம் ஆண்டு (ஆங்கிலேயர் காலத்தில்) 'ஹிந்துயிஸம்' என்ற வார்த்தை ஒரு மதத்தைக் குறிக்கும் வார்த்தையாகக் கட்டி எழுப்பப்பட்டது. அப்போது இருந்த மக்கள்தொகையைக் கணக்கிடும்போது 'பார்ஸி, இஸ்லாம், கிறிஸ்தவம் இந்த மூன்று மதங்களிலும் இல்லாதவர்கள் அத்தனை பேரும் இந்து' என்று சட்டம் இயற்றினார்கள் என்று கருதப்படுகிறது.

சைவர்கள், வைணவர்கள், சமணர்கள், பௌத்தர்கள், சீக்கியர்கள் - இவர்கள் அனைவரும் இந்துக்கள் ஆகிவிட்டனர். தமிழ்நாட்டில் இருப்பவையெல்லாம் சைவ-வைணவ மடங்கள். ஆனால், சட்டப்படி அவை அனைத்தும் இந்து மடங்களாகி விட்டன. ஆராய்ச்சியின் அடிப்படையில், தமிழர்களுக்கு தனியான சமயம் இருந்திருக்கிறது. சிவ வழிபாடு, வைணவ வழிபாடு, முன்னோர் வழிபாடு, முருகன் வழிபாடு இவையெல்லாம் தமிழர்களின் சமய வழிபாடாக இருந்திருக்கின்றன.

சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு பிறந்து வளர்ந்த வள்ளலார், "தமிழை எனக்குத் தந்த இறைவனுக்கு நன்றி" என்று சொல்கிறார். வள்ளலார் சிவமதம்தானே? விவேகானந்தர் அமெரிக்காவிலே போய் இந்து மதத்தைப் பற்றிப் பேசி பாராட்டுகளைப் பெற்றிருக்கிறார்.

அவர், கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் பேசும்போது 'நாமெல்லாம் இந்துக்கள்' என்று பேசினாராம். அப்போது அக்கூட்டத்துக்குப் பார்வையாளராக வந்திருந்த மனோன்மணீயம் சுந்தரனார் 'நாங்கள் இந்துக்கள் இல்லை, திராவிடர்கள்' என்று கூறினாராம்.

ஆறுமுகம் செட்டியார் என்பவர் அக்காலகட்டத்தில் பத்திரங்களில் 'சிவமதம்' என்றே எழுதியிருக்கிறார். மொரிஷியஸ் நாட்டுக்கு வேலைக்குச் சென்றவர்கள் குறித்த தகவல்களில் அவர்கள் மதம் 'தமிழ் மதம்' என்றே குறிக்கப்பட்டிருக்கிறது. இலங்கையில் இன்று வரை 'சைவ நெறி' என்று குறிப்பிட்டே இறை நம்பிக்கை ஊட்டப்படுகிறது.

அதைப் போலவே ஐரோப்பிய நாடுகளிலும் சைவ நெறி என்றுதான் கற்றுக்கொடுக்கிறார்கள். மாவீரன் அலெக்ஸாண்டர் இந்தியாவின் மீது படையெடுத்த போது, சிந்துவுக்கு கிழக்கே உள்ள மக்களை இந்துக்கள் என்று குறிப்பிட்டார் என்று காந்தியடிகளே பதிவு செய்திருக்கிறார்.

அண்ணல் அம்பேத்கர், "இந்து சமயம் என்பது ஒரு புனைவு. இந்து மதத்திற்கு ஒரு பொதுப்பெயர் இல்லாததற்குக் காரணம், இது ஒரு சமூகமாக உருவாகியதில்லை. ஒரு சமூகமாகவும் உணரப்படவில்லை. எனவே, அதற்கு பெயரே உருவாகாமல் போனது" என்கிறார். சைவர்கள் அருளிச்செய்த தேவார, திருமுறைகளிலும், வைணவர்கள் அருளிச்செய்த பாசுரங்களிலும் மதம் என்கிற சொல் இடம்பெறவில்லை. ஆதிக்கத்தில் இருந்து விடுபட சமண மதம், புத்த மதம், இஸ்லாமிய மதம், கிறித்தவ மதம் ஆகியவற்றைத் தொடர்ந்து இந்து மதம் என்ற சொல்லாடல் உருவாக்கப்பட்டிருக்கிறது.

'சமயம்' என்று சொன்னால் பக்குவப்படுதல், முதிர்ச்சி என்று எடுத்துக் கொள்ள வேண்டும். இதில் ஆத்திக, நாத்திக கருத்துகள் பலவிதங்களில் மோதிக் கொள்கின்றன. ஒடுக்கப்பட்டவர்கள், விளிம்புநிலை மக்கள் தாங்கள் இந்துக்களாக இருந்தும், நசுக்கப்படுவதாக ஆண்டாண்டு காலமாகப் போராடி வருகின்றனர். அதன் வெளிப்பாடாக, சில முற்போக்குச் சிந்தனையாளர்களும் மதம் சார்ந்த எதிர்நிலையையும் ஒடுக்கப்பட்டோர் உரிமை சார்ந்த கருத்துகளையும் தொடர்ந்து எடுத்து வைத்து வருகிறார்கள்.

இஸ்லாமிய, கிறிஸ்தவ மதங்கள் நிறுவப்பட்ட மதங்கள். அவை நிறுவனமயமாக்கப்பட்டதன் விளைவாகவே அவற்றின் வழிபாட்டுத் தலங்கள் அந்தந்த மதங்களின் கைகளில் இருக்கின்றன. அந்தந்த மதம் சார்ந்த மனிதர்களின் ஒவ்வொரு செயல்பாட்டிலும் அந்த மதங்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன.

அந்த மதங்களில் சேர்வதற்கும், அங்கு சேர்ந்து இறை அருளைப் பெறுவதற்கும் குருமார்களின் கட்டுப்பாடுகள் உண்டு. ஆனால், இறை மறுப்பாளர்களுக்கு அங்கு இடம் இல்லை. ஆனால், இந்து மதத்தின் பெருமை அது மக்களின் நம்பிக்கையாக இருக்கிறது. அதனால்தான், நாத்திகரும் கூட அதில் ஒரு அங்கமாக இருக்கிறார்.

இந்து மதத்தில் ஜாதி ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்ற காரணத்தினால், ஒடுக்கப்பட்டவர்கள் பீறிட்டுக் கிளம்புவதும், உயரத்தில் இருப்பவர்கள் அதை அடக்க முயல்வதும் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கின்றது. சிறுதெய்வ வழிபாடு திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது.

சென்னை மாகாணத்தில் 1925 காலகட்டத்தில் பதவி வகித்த நீதிக்கட்சி அரசானது இந்து சமய அறநிலையங்கள் குறித்த மசோதாவை முன்வைத்தது. இது முக்கியமான சீர்திருத்தம் என்று அன்று கருதப்பட்டது. அதே போல் சுதந்திரத்திற்குப் பின் 1951இல் கொண்டு வரப்பட்டது இந்து மத அறநிலைய சட்டம்.

1956இல் மொழிவாரி மாநிலங்கள் சீரமைப்பு நடந்த பின்னர், கேரள மாநில அரசு, அதுவரை மன்னர்களின் கட்டுப்பாட்டில் இருந்த கோயில்களின் நிர்வாகத்தைத் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டது. 1959இல் புதிய இந்து அறநிலைய சட்டம் உருவாக்கப்பட்டு கோயில் நிர்வாகங்கள் அறநிலைய வாரியத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டன.

இங்கே கவனிக்க வேண்டிய விடயங்கள் இரண்டு. முதலாவது, அரசு கட்டுப்பாட்டில் இருந்தாலும் சமயம் சார்ந்த சடங்குகள், சம்பிரதாயங்களை நடத்துவதில் அரசு தலையிடுவதில்லை. எந்த அரசாக இருந்தாலும் சமயத்தின் அடிப்படையான சடங்குகளில் சட்டப்படி தலையிட முடியாது. இரண்டாவது, கோயில் நிர்வாகத்தை கையில் வைத்திருப்பதால் கோயில்களின் வருமானத்தை அரசு எடுத்துக்கொண்டு இலாபம் காணக்கூடாது என்பதுதான் அறநிலையங்களின் அடிப்படையான கொள்கையாகும்.

இந்தியா மதச்சார்பற்ற நாடாக இருக்கிறது. ஆனால், பாகிஸ்தான் இஸ்லாமிய நாடாக மாறியது. இந்தியா 'மதச்சார்பற்ற' என்ற வார்த்தையில் உயிர்ப்போடு இருக்கிறது. ஆனால், இந்து மதத்தின் மீது வெறுப்பு உணர்வை இந்து மதத்தினரே விதைக்கின்றனர். அத்தகைய உரிமையை, சுதந்திரத்தை இந்து மதம் தந்திருக்கிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

வேற்று மதங்களில் இருப்பவர்கள், அங்கேயே இருந்து கொண்டு அந்த மதங்களையே இழிவாகப் பேசக்கூடாது. அப்படிப் பேசும் வாய்ப்பு, அந்த மதத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. இருந்தாலும், ஒடுக்கப்பட்டவர்களின் குரலை நாம் கேட்டாக வேண்டும்.

இந்து மதத்தின் மீதான நம்பிக்கையை அம்மதத்தின் கடைநிலையில் இருக்கின்ற குரலற்றவர்களின் குரலாக நாம் ஏற்றுக் கொண்டு அவர்களை ஆரத்தழுவுகிறபோது சமயம் என்னும் வலுவான கட்டமைப்பு வந்து சேர்கிறது. ஆத்திரமூட்டும் பேச்சுகளால் ஒரு மதத்தின் ஆணிவேரையும், நம்பிக்கையையும் அசைத்துப் பார்த்து விட முடியாது.

சமயம் என்பதை மனிதனைப் பண்படுத்துவதற் குரிய ஒன்றாகவே நாம் பார்க்க வேண்டும். ஏனென்றால், சமயம் என்ற சொல், மனிதன் பக்குவப்படுவதற்காகவே உருவாக்கப்பட்டிருக்கிறது.

**கட்டுரையாளர் - முன்னாள் அமைச்சர்**
**(நன்றி - தினமணி )**

## நக்கல் நமசிவாயம்

**தீபாவளி போனஸா தொழிலாளர்களுக்கு ஒரு ஐயாயிரம் ரூவா குடுக்கச் சொல்லுங்கோ பார்ப்பம்..!**



## இன்றைய நாளில்...

★ 1847 – அமெரிக்க மதப்பரப்புனரும், மருத்துவருமான சாமுவேல் பிஸ்க் கிறீன் பருத்தித்துறையை வந்தடைந்தார்.

1889 – தான்சானியாவின் கிளிமஞ்சாரோ மலையின் உச்சி முதன்முதலில் எட்டப்பட்டது.

1890 – யாழ்ப்பாண நகரில் "சின்னக்கடை" எனப்படும் முக்கிய சந்தையில் கடைத்தொகுதி ஒன்று இடிந்து வீழ்ந்ததில் சில உயிரிழப்புகளுடன், பலர் படுகாயமடைந்தனர்.

1976 – தாய்லாந்தில் அரசுக்கெதிராக இடம்பெற்ற மாணவர் போராட்டம் இராணுவத்தினரால் நசுக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

1977 – மிக்-29 வானூர்தி தனது முதலாவது பறப்பை மேற்கொண்டது.

1979 – திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் வெள்ளை மாளிகைக்குச் சென்ற முதலாவது திருத்தந்தை என்ற பெயரைப் பெற்றார்.

1981 – எகிப்திய அரசுத்தலைவர் அன்வர் சாதாத் இஸ்லாமியத் தீவிரவாதிகளால் படுகொலை செய்யப்பட்டார்.

1987 – பிஜி குடியரசாகியது.

1995 – வேறொரு சூரியனை சுற்றி வரும் முதலாவது கோள் 51 பெகாசி பி கண்டுபிடிக்கப்பட்டது.

2008 – அநுராதபுரம் குண்டுவெடிப்பு: தற்கொலைக் குண்டுவெடிப்பில் இலங்கையின் இராணுவத் தளபதி ஜானக பெரேரா உட்பட 27 பேர் கொல்லப்பட்டனர்.

2010 – இன்ஸ்ட்டாகிராம் ஆரம்பிக்கப்பட்டது.

# பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் திருத்த சட்டமூலத்துக்கு அனுமதி



பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலத்துக்கு உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கமைய திருத்தங்களுடன் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அனுமதிக்கப்பட்டது.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சுசார் ஆலோசனைக் குழு அதன் தலைவர் அமைச்சர் காஞ்சன விஜேசேகர தலைமையில் நேற்று முன்தினம் (04) நடைபெற்றபோதே இதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

இந்த பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலத்தின் ஊடாக பெற்றோலிய இறக்குமதி, வழங்கல் மற்றும் விநியோகம் பெற்றோலியக் கூட்டுத் தாபனம் மற்றும் இந்தியன் ஓயில் நிறுவனம் ஆகியவற்றுக்கு மேலதிகமான தரப்பினருக்கு இடமளிக்கப்படும்.

இந்தக் குழுக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான நாலக்க பண்டார கோட்டேகொட, எம்.எஸ்.தௌபீக் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பேருவளை – தர்காநகரிலுள்ள களஞ்சியங்கள் அதிரடி சுற்றிவளைப்பு

## மக்கள் பாவனைக்கு உதவாத 590 கிலோ அரிசித்தொகை மீட்பு



பேருவளை மற்றும் தர்கா நகரிலுள்ள களஞ்சியங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையினபோது மக்கள் பாவனைக்கு உதவாத 590 கிலோ கிராம் சம்பா அரிசித்தொகை கைப்பற்றப்பட்டுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமைய, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பேருவளை பொலிஸார் ஒன்றிணைந்து முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே, நேற்று முன்தினம் (04) குறித்த இரு களஞ்சியங்களுக்கும் சீல் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

சந்தேகநபர் தர்கா நகரைச் சேர்ந்தவர் என்றும் இந்த நெல் தொகையில் 500 கிலோ கிராம் அரிசித்தொகை பேருவளை சுப்பர் மார்க்கட்டொன்றுக்கு சொந்தமான களஞ்சியமொன்றில் களஞ்சியப் படுத்தப்பட்டிருந்ததாகவும், மிகுதி 90 கிலோ கிராம் அரிசித்தொகை தர்க்கா நகரிலுள்ள ஒரு களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்ததாகவும் சுற்றிவளைப்பை முன்னெடுத்த பொலிஸார் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சந்தேகநபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கமைய, வெளிநாட்டிலிருந்து அரிசி இறக்குமதி செய்யும் நபரொருவரின் களஞ்சியத்தில் வெள்ளநீர் புகுந்ததால் இந்த அரிசித்தொகை நுகர்வுக்கும் விற்பனைக்கும் பொருத்தமற்றதாகியுள்ளது.

இந்த அரிசித்தொகை வைக்கப்பட்டிருந்த களங்சிய கட்டடத்தொகுதிக்கு காப்புறுதி பதிவு செய்திருந்ததாகவும் அதனுடன் தொடர்புடைய காப்புறுதித் தொகையை குறித்த காப்புறுதி நிறுவனத்திடமிருந்து பெற்றுள்ளதுடன், இவ்வாறு வெள்ளநீரில் சேதமடைந்துள்ள அரிசித்தொகை குறித்த காப்புறுதி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமையும் விசாரணைகளில் மேலும் தெரியவந்துள்ளது. அதன் பின்னர் குறித்த காப்புறுதி நிறுவனத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட் கழிவுப்பொருள் அகற்றும் நிறுவனத்தினூடாக தர்கா நகர் வியாபாரி ஒருவர் இந்த அரிசி தொகையை 16 இலட்சம் ரூபாவுக்கு கொள்வனவு செய்துள்ளதாக பொலிஸ் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளதாக குறித்த பிரதேச நிர்வாகத்துக்கு உட்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

குறித்த வியாபாரி இந்த முழு அரிசித் தொகையையும் கடந்த 28ஆம் திகதி பேருவளை மற்றும் தர்கா நகர் பகுதிகளில் களஞ்சியப்படுத்தியுள்ளதுடன், அவர் குறித்த அரிசித்தொகையை மீண்டும் சுத்தம் செய்து மீள் விற்பனைக்காக இவ்வாறு களஞ்சியப்படுத்தி வைத்திருந்தமை மேலும் தெரியவந்துள்ளது.

கொள்வனவு செய்யப்பட்டிருந்த அரிசித்தொகையில் மேலும் 2500 கிலோ கிராம் நிறையுடைய ஓரளவு சுத்தம் செய்யப்பட்ட அரிசித்தொகை கடந்த சனிக்கிழமை தர்கா நகர் பிரதேசத்திலுள்ள மூன்று விற்பனை நிலையங்களுக்கு விநியோகித்துள்ளதாக சந்தேகநபர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், மேற்குறிப்பிட்ட அரிசித்தொகை விற்பனை செய்யப்பட்ட தர்கா நகரிலுள்ள குறித்த விற்பனை நிலையங்கள் நேற்று (5) பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இதன்போது முழு அரிசித்தொகையின் மாதிரியை பரிசோதனைக்கு உட்படுத்தி அவற்றை அழிப்பதற்கான நீதிமன்ற அனுமதியை பெற்றுக்கொண்டு, இரசாயன பகுப்பாய்வு அறிக்கையை பெற்றுக்கொண்டு அதன்பின்னர் சந்தேகநபருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமென களுத்துறை பிரதேசத்துக்கு பொறுப்பான, நிர்வாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆர்.ஜே. சிங்கபாகு தெரிவித்துள்ளார்.

அடுத்த பரிசோதனை நடவடிக்கைகள் இடம்பெறும்வரை குறித்த அரிசி களஞ்சியத்துக்கு சீல் வைக்க நேற்று முன்தினம் (04) நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# எலயாபத்துவவில் நபர் ஒருவரின் சடலம் மீட்பு

**(அநுராதபுரம் செய்தியாளர்)**

அநுராதபுரம் எலயாபத்துவ பகுதி வீடொன்றில் உயிரிழந்திருந்த நிலையில் ஆணொருவரின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாக எலயாபத்துவ பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய எலயாபத்துவ, யாலேகம பகுதிக்கு விஜயம்செய்த பொலிஸார், வீடொன்றுக்குள் உயிரிழந்திருந்த நபரொருவரின் சடலமொன்றினை பிரதேசவாசிகளின் உதவியுடன் மீட்டுள்ளனர்.

எலயாபத்துவ யாலேகம பகுதியைச் சேர்ந்த 68 வயதுடைய ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற அநுராதபுரம் நீதவானால் ஆரம்பகட்ட நீதவான் விசாரணைகள் இடம்பெற்றதையடுத்து பிரேத பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக சடலம் அநுராதபுரம் போதனா வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் எலயாபத்துவ பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# அபான்ஸ் வழங்கும் LG உற்பத்திகள் அதிகரித்துச்செல்லும் மின்சார செலவுக்கான தீர்வாகும்

மின் கட்டணம் 75% அதிகரித்துள்ளதால், யூனிட்டுக்கான கட்டணம் கணிசமான அளவு அதிகரித்துள்ளது. இதன் காரணமாக இப்போது நீங்கள் மின்சாரத்தில் இயங்கும் உற்பத்தியொன்றை வாங்கும்போது, குறித்த உற்பத்தியின் மின்திறன் தொடர்பாக கவனம் செலுத்துவது மிகவும் முக்கியமாகும். அபான்ஸ் நிறுவனம் பல ஆண்டுகளாக ஆற்றல் சேமிக்கும் உற்பத்திகளையும்,

சுற்றுச்சூழலுக்கு ஏற்ற தயாரிப்புகளையும் சந்தைக்கு அறிமுகம் செய்து வருகிறது. அபான்ஸ் வழங்கும் மின்சார சேமிப்பு உற்பத்திகள் அனைத்தும் அதிகரித்துச் செல்லும் மின்செலவிற்கு மிகவும் ஏற்ற உற்பத்திகளாகும்.

அபான்ஸ் வழங்கும் விற்பனை நாமங்களில் பிரம்மாண்ட தொழில்நுட்பத்தைக் கொண்ட உலகப் புகழ்பெற்ற LG உற்பத்திகள் மின்சார சேமிப்பின் முதல்வனாகும். LG Insta View Door குளிர்சாதனப்பெட்டி இன்வெர்டர் லீனியர் கொம்பிரெஸருடன் வருவதால் 42%வரை மின்சாரத்தை சேமிக்கிறது. LG Door Cooling+ தொழில்நுட்பம் என்பதால் உணவுகளை நீண்ட நாட்கள் புத்துணர்வோடு வைத்துக்கொள்ள முடியும். மேலும், Linear Cooling மூலம் வெப்பநிலை மாற்றத்தைக் குறைத்து மின்சாரத்தை சேமிக்கிறது. LG InstaView Door in Door குளிர்சாதனப்பெட்டியின் நவீன கதவை இரண்டுமுறை தட்டிய பின்னர் (நொக் செய்தல்) குளிர்சாதனப் பெட்டியின் உள்ளே இருக்கும் பொருட்களை குளிர்சாதனப் பெட்டியை திறக்காமல் பார்க்க முடியும். இதன் மூலம் 41% மின்சாரத்தை சேமிக்க முடியும்.

வைரஸ்களுக்கு எதிராக LG Lty கூல் இன்வெர்டர் வளிச்சீராக்கி சாதாரண இன்வெர்டர் வளிச்சீராக்கியை விடவும் மின்சாரத்தை சேமிக்கிறது. இதிலுள்ள LG Lty இன்வெர்டர் கொம்பிரெஸர் குறைந்த சத்தத்தில் இயங்கி மிகவும் வேகமாக குளிர்ச்சியூட்டுகிறது. Super Convertible 5-in-1 Cooling Control ஊடாக குளிர்ச்சியூட்டும் கொள்ளளவு 100% இலிருந்து 80% 60% அல்லது 40% வரை குறைவதோடு, வேகமான குளிர்ச்சியூட்டலின்போது 110% வரை அதிகரிக்கிறது. LG Lty கூல் இன்வெர்டர் வளிச்சீராக்கி சூழல் நட்புறவுமிக்க R32 வாயுவாகும். Lty இன்வெர்டர் கொம்பிரெஸர் செயல்பாட்டில் 40% வேகத்துடன் குளிர்ச்சியூட்டுவதோடு, 70% வரை அதி உயர் செயல்திறனுடன் மின்சாரத்தை சேமிக்கிறது.

LG வோஷர் ட்ரையர்களில் இருக்கும் இன்வெர்டர் டிரெக்ட் ரைவ் தொழில்நுட்பம் ஆடைகளின் மென்மை, எடை மற்றும் தன்மைக்கு ஏற்ப சலவை முறையை தெரிவுசெய்து இயங்குவதால் 39% வரை மின்சாரத்தை சேமிக்கிறது. Turbo Wash 360 மூலம் 39 நிமிடங்களில் நீர் மற்றும் மின்சாரத்தை மிகவும் குறைவாக செலவு செய்து ஆடைகளுக்கு தேவையான சலவையை வழங்குகிறது. Turbo Wash மாதிரி ஒரே தடவை 2 லோட்கள் சலவை செய்வதால் நீர், மின்சாரம் போன்று நேரத்தை சேமித்து தேவையான சிக்கனத்தில் சலவையை வழங்குகிறது.

LG front loader சலவை இயந்திரம் நீரை சேமித்து 39% வரை மின்சாரத்தை சேமிக்கிறது.

இன்வெர்டர் டிரெக்ட் ட்ரை தொழில்நுட்பம் கொண்ட LG டிஷ் வொஷர் மிகவும் சிறப்பாக மின்சாரத்தை சேமிக்கிறது. டுபு மைக்ரோவேவ் அவன்கள் 11% வரை மின்சாரத்தை சேமிப்ப



தோடு, பல்வேறு வகையான உணவுகளை ஆரோக்கியமாக சமைப்பதற்கு வழிவகுக்கிறது. Light-Emitting Diodess கொண்ட LG UHD தொலைக்காட்சிகள் மெல்லிய பெனல் கொண்டுள்ளதோடு, சாதாரண தொலைக்காட்சிகளை விட இது மிகவும் சிறந்த முறையில் மின்சாரத்தை சேமிக்கிறது.

அபான்ஸ் வழங்கும் LG உற்பத்திகளை பயன்படுத்தும்போது மின்சாரத்தை சேமிப்பதற்கு பிரத்தியேகமாக உங்கள் காலநேரத்தை செலவு செய்ய தேவையில்லை. மின்சாரத்தை சேமிக்கும் நவீன சிறப்பம்சங்களைக் கொண்ட இந்த உற்பத்திகள் நாடளாவிய அபான்ஸ் காட்சியறைகள் மற்றும் BuyAbans.com இல் விற்பனையின் பின்னரான சிறப்பு சேவையுடன் உங்கள் இல்லத்திற்கே வரவழைத்திட முடியும்.

மேலதிக விபரங்களுக்கு 0115 999 000 என்ற இலக்கத்திற்கு அழையுங்கள். நமது குழந்தைகளின் நளைய தினத்திற்காக இன்றே மின்சாரத்தை சேமித்திடும், சூழல் நட்புறவுமிக்க LG உற்பத்திகளுக்கு மாறுங்கள்.






# கைத்தொழில் அமைச்சு

## உலக பொதிசெய் அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட பொதிசெய் தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ் பயிற்சிப் பாடநெறி - 2022

கைத்தொழில் அமைச்சு இலங்கை பொதிசெய் நிறுவனத்துடன் (Sri Lanka Institute of Packaging இணைந்து, பொதிசெய் ஊழியர்களின் திறன் விருத்திக்காகவும் பொதிசெய்யும் தொழிலின் தொழில்நுட்பம் பற்றி ஊக்குவிப்பதற்காகவும் வார இறுதி நாட்களில் பயிற்சி வகுப்புகளை நடத்த ஒழுங்கு செய்துள்ளது. எனவே, உற்பத்திச் செயன்முறைகளில் பணியாற்றும், பின்வரும் தகுதிகளைக்கொண்ட பொருத்தமான சிரேஷ்ட தொழில்நுட்பத் தர ஊழியர்களின் விண்ணப்பப் படிவங்களை அனுப்பிவைக்குமாறு நிறுவனங்களுக்கு இத்தால் அழைப்பு விடுக்கப்படுகிறது.

**தகைமைகள்:** க.பொ.த. (உ/தரம்) சித்தியடைந்த அல்லது விஞ்ஞானம், விவசாயம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் ஏதேனும் ஒரு பாடம் அடங்கலாக 3 திறமைச் சித்திகளுடன், க.பொ.த. (சா/தரம்) சித்தியடைந்துள்ள பொதிசெய் துறையை தொழிலாக தேர்ந்தெடுக்க விரும்புவர்கள் விண்ணப்பிக்கலாம் என்பதோடு, தற்போது பொதிசெய் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (2 வருட துறைசார் அனுபவம்.)

**மொழி:** ஆங்கிலம் மற்றும் சிங்களம்

**பாடநெறியில் அடங்கும் விடயம்:** பொதிசெய் துறையின் நோக்கம் / பொதிசெய்வது மற்றும் உற்பத்தித் திறன், பொதிசெய் தரம் மற்றும் தர முகாமை/ பொலிமர் தொழில்நுட்பம் / பொதிசெய் பரிசோதனைகள் / பொதிசெய் பாவனை / பொதிசெய் செயல்பாடு / பொருளாதார பொதியிடல் / பொதிசெய்முறை சந்தைப்படுத்தல் / பொதிசெய்யும்போது ஏற்படும் சுற்றாடல் மற்றும் சுகாதார தாக்கங்கள்/ பொதிசெய்முறையின் தர நிலைகள் / பசுமையான பொதியிடல் / தெர்மோ ப்ளாஸ்ட்டிக் செயல்முறை / நெகிழ்வு பொதியிடல் / திடப் பொதியிடல் / கடதாசி / கொருகேடட், பைபர் பொதியிடல் / மரப்பெட்டி, கண்ணாடி மற்றும் உலோக பொதியிடல் மற்றும் பொதியிடுதல் பற்றிய கைத்தொழிற்சாலை அவதானிப்பு அறிக்கைகளும் உள்ளடங்கும்.

**இடம் :** கொழும்பு சுற்றுபுறத்தில் வசதியான இடத்தில்

**காலஎல்லை :** 2022 ஒக்டோபர் 15ஆம் திகதிமுதல் (கைத்தொழிற்சாலையின் 3 கைத்தொழில் களஆய்வு அடங்கலாக 15 நாட்கள் சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில்)

**பாடநெறிக் கட்டணம் மற்றும் பிற செலவுகள் :** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்கு தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு, பாடநெறியின் செலவில் 50% கைத்தொழில் அமைச்சினால் வழங்கப்படும். மிகுதி 50% செலவு கைத்தொழில் மூலம் செலுத்தப்படும் என்பதை தொழில் தருனர் / பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் விண்ணப்பத்திரத்தில் உறுதிப்படுத்த வேண்டும். பங்கேற்பாளர் ஒருவருக்கான மொத்த செலவு ரூ.75,120 என்பதோடு இந்த பாடநெறியில் பங்கேற்பாளர்களின் ஆகக்கூடிய எண்ணிக்கை 25 ஆக வரையறுக்கப்பட்டுள்ளது.

**விண்ணப்பங்கள்:** விண்ணப்பதாரிகள், பூரணமாக நிரப்பப்பட்ட தமது விண்ணப்பங்களை industry.gov.lk/applications என்ற இணையதளத்தில் இருந்து தரவிறக்கலாம். மேலே குறிப்பிட்ட அனைத்து விபரங்களுடன் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை தொழில் தருனர் (நிறுவனத் தலைவர் / மனிதவளப் பிரிவு) ஊடாக 2022 ஒக்டோபர் 10ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பணிப்பாளர், அபிவிருத்திப் பிரிவு 1, கைத்தொழில் அமைச்சு, 73/1, காலி வீதி, கொழும்பு 3 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டம். மேலதிக விபரங்களுக்கு...

**தொலைபேசி இல. 011-2422319 , தொலைநகல்: 011-2432750**
**மின்னஞ்சல்:** sector1mid@yahoo.com
**இணையதளம்:** www.industry.gov.lk/

**செயலாளர்**
**கைத்தொழில் அமைச்சு**

# போலிக் கையொப்பமிட்டு காணியை அபகரித்த ஆசிரியை?

**இரத்தினபுரியில் சம்பவம்; நால்வர் கைது:**
**உறுதிப்பத்திரத்தை எழுதிய சட்டத்தரணி - நொத்தாரிஸ் உட்பட மேலும் பலர் மீது விசாரணை**

*(ஏ.ஏ.எம்.பாயிஸ்)*

மரணித்த ஒருவரின் சுமார் 3 கோடி ரூபா பெறுமதியான காணியுடன் கூடிய வீட்டை போலியான கையொப்பமிட்டு அபகரித்த சந்தேகத்தின் பேரில் ஆசிரியையொருவரை இரத்தினபுரி பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இரத்தினபுரி நகரில் வசிக்கும் ஆசிரியையொருவர் குருவிட்ட கன்னன்கொட பகுதியிலுள்ள குறித்த காணியுடன் கூடிய வீட்டை அபகரித்துள்ளதாக இறந்தவரின் சகோதரியொருவர் இரத்தினபுரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இதனையடுத்து குறித்த ஆசிரியை கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

கேகாலை பிந்தெனிய பகுதியைச் சேர்ந்த சொத்தின் உரிமையாளர் இறந்ததன் பின்னர் அதை போலிக் கையொப்பமிட்டு அபகரிக்க முற்பட்டுள்ளதாகவும், இரத்தினபுரி காணிப்பதிவாளர் காரியாலயத்திலுள்ள காணி உரிமையாளரின் உறுதிப்பத்திரத்திலுள்ள கையொப்பம் அழிக்கப்பட்டுள்ளதாகவும், இறந்தவரின் கையொப்பம் இரசாயனப் பகுப்பாய்வின் பின்னர் பரிசோதிக்கப்பட்டபோது புதிய உறுதிப்பத்திரத்தில் காணப்படும் கையொப்பம் போலியானது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் விசாரணையின்போது தெரிய வந்துள்ளது.

இந்த சொத்தை இறந்தவர் தனக்கு அன்பளிப்பாக வழங்கியதாக ஆசிரியை தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

போலி உறுதிப்பத்திரத்தில் சாட்சிகளாக கையொப்பமிட்ட ஆசிரியையின் கணவர் உட்பட மேலும் இருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளதாகவும் இந்த உறுதிப்பத்திரத்தை எழுதிய சட்டத்தரணி, நொத்தாரிஸ் உட்பட மேலும் பலர் மீது விசாரணை மேற்கொள்ளவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூ.15,000 தீபாவளி முற்பணம் வழங்கப்பட வேண்டும்

## வடிவேல் சுரேஷ் எம்.பி. வலியுறுத்து



“தீபாவளி முற்பணமாக மலையக பெருந்தோட்ட மக்களுக்கு குறைந்தபட்சம் 15 ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும்” என நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கருத்து தெரிவித்தார் .

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அதிகரித்து வரும் வாழ்வாதார செலவை கருத்திற்கொண்டு தீபாவளி முற்பணமாக குறைந்தது 15,000 ரூபா வழங்கப்பட வேண்டுமென்பதில் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் ஆணித்தரமாக இருக்கின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பெருந்தோட்டத் தலைவர் என்பதற்கிணங்க இவ்விடயம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தின்போது எதிர்க்கட்சித் தலைவருக்கு எடுத்துரைத்ததற்கு அமைய, இவ்விடயம் தொடர்பில் நாடாளுமன்றத்திலும் சஜித் பிரேமதாஸ கருத்துரைத்தார்.

அரசின் கீழ் இயங்குகின்ற பெருந்தோட்ட நிறுவனங்கள் மற்றும் 22 தனியார் பெருந்தோட்ட கம்பெனிகள் அனைத்தும் ஒன்றிணைந்து தொழிலாளர்களின் வருகை தொடர்பாகவோ அல்லது வேறு எதுவித நிபந்தனைகளும் இன்றி அனைவருக்கும் தீபாவளி முற்பணம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதனை நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியிடமும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சரிடமும் எடுத்துரைத்தேன்.

பொறுப்பு வாய்ந்த பெருந்தோட்டக் கம்பனிகள் மனிதாபிமான ரீதியில் நடந்துகொள்ள வேண்டும் என்பதனை இச்சந்தர்ப்பத்தில் வலியுறுத்துகின்றேன்” - என்றார்.



நவராத்திரி விழாவின் இறுதி நாளான நேற்று (5) தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தில் விஜயதசமி விசேட பூஜைகளும் வித்தியாரம்ப நிகழ்வுகளும் ஆலய பிரதம குருக்கள் லங்கா தேசமாணி முத்துசாமி ஐயர் பிரசாந்த் சர்மா தலைமையில் இடம்பெற்றது.

*(தலவாக்கலை நிருபர்)*



**பதுளை சரஸ்வதி தேசிய கல்லூரியில் நேற்று (05) நடைபெற்ற வாணி விழாவில், கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார், ஊவா மாகாண தமிழ்க் கல்வி பிரதி பணிப்பாளர் யோ.கலையரசி ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (பதுளை நிருபர்)**

# குடியிருப்புப் பகுதிக்குள் நுழைந்த சிறுத்தைப்புலி உயிருடன் மீட்பு

*(எம்.கிருஸ்ணா - க.கிஷாந்தன்)*



திம்புளை – பத்தனை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட மவுண்ட்வேர்னன் தோட்டத்தின் வட்டக்கான் பிரிவிலுள்ள குடியிருப்பு பகுதியில் சிறுத்தைப்புலியொன்று உயிரு டன் பிடிக்கப்பட்டுள்ளது.

வட்டக்கான் பிரிவிலுள்ள வீடொன் றின் பின்பகுதியில் சிறுத்தைப்புலியொன்று நேற்றுக் காலை சிக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உணவு தேடி இந்த பகுதிக்கு வரும் வழியில் இவ்வாறு வீட்டின் பின்பகுதிக்கு குறித்த சிறுத்தை இறங்கியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இதனை கண்ட வீட்டில் வசிப்போரும், பிரதேச வாசிகளும் திம்புள்ள - பத்தனை பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். இதனையடுத்து பொலிஸார் நுவரெலியா வனஜீவராசிகள் காரியாலயத்துக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த நுவரெலியா வனஜீவராசிகள் அதிகாரிகள் மற் றும் ரந்தனிகெல பசு வைத்தியர் அத்தரங் கொல பிரிதெனிய தலைமையிலான குழுவினர் சிறுத்தையை உயிருடன் மீட்டு ரந்தனிகெலவுக்கு கொண்டு சென்றுள்ளனர்.

இப்பகுதியில், இருக்கும் சிறுத்தைகள் நடமாட்டம் குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் வனஜீவராசி அதிகாரிகளிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.



**நானுஓயா டெஸ்போட் கீழ்ப்பிரிவு பாலர் பாடசாலையில் சர்வதேச சிறுவர் தினக் கொண்டாட்ட நிகழ்வு கடந்த திங்கட்கிழமை (03) பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது**

**பெற்றோரின் பங்களிப்புடனும், ஆசிரியர்களின் வழிகாட்டலிலும் நடைபெற்ற இந்நிகழ்வில் பாலர் பாடசாலை சிறார்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. கலந்துகொண்ட சிறார்களுக்கு இனிப்புகளும் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கிவைக்கப்பட்டன.**

*(படங்கள் - செ.திவாகரன்)*



**கண்டி இந்து இளைஞர் மன்ற ஏற்பாட்டில் இடம்பெற்ற நவராத்திரி விழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள். (கண்டி நிருபர்)**

# உலக நீர் வளமும் உள்ளூர் நீர் பயன்பாடும்; மாணவர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு



(கிளிநொச்சி நிருபர்)

உலக நீர் வளமும், உள்ளூர் நீர் பயன்பாடும், நீர் முகாமைத்துவமும் பற்றிய மாணவர்களுக்கான ஒரு நாள் விழிப்புணர்வு செயலமர்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது கிளிநொச்சி நகர ரோட்டறிக் கழகத்தின் நிதி அனுசரணையில் குறித்த செயலமர்வை நடத்தியிருந்தது. பாடசாலை முதல்வர் திருமதி ஜெயா மாணிக்கவாசகன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்ட பொறியியலாளர் எஸ்.சாரங்கன், கிளிநொச்சி நகர ரோட்டறிக் கழகத்தின் தலைவர் வண. அருட்தந்தை ரி.யோசுவா ஆகியோர் அறிமுக உரையினையும், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின்

உத்தியோகத்தர்களான மு.தமிழ்ச்செல்வன் உலக நீர் வளம், நீர் பயன்பாடு பற்றியும், ஜனனு ஜனன்சந்த் நீரின் தரம், நோய்த்தாக்கங்கள் பற்றியும், அன்றூ பிரவீண் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையும் பொதுமக்கள் உறவும், சேவைகள் பற்றியும், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் கிளிநொச்சி அலுவலக பொறுப்பதிகாரி சி. பாலகுமார் குழாய்வழி குடிநீர் விநியோக நடைமுறைகளும் செயல் முறைகளும் பற்றியும் மாணவர்களுக்கு விளக்கமளித்தனர்.

தரம் 9, 10, 11 மாணவர்களுக்கு நடத்தப்பட்ட இச்செயலமர்வினை முன்னிட்டு முன்னதாக மாணவர்களிடையே நடத்தப்பட்ட நீர் தொடர்பான பேச்சுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும் கலந்துகொண்ட அனைத்து மாணவர்களுக்கான பங்குபற்றியமைக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டதோடு, 45 நிமிடங்கள் பரீட்சையும் நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி ரோட்டறிக் கழகத்தைச் சேர்ந்த அதிபர் அ.பங்கையற்செல்வன், விதைநெல் ஆராய்ச்சி நிலையப் பணிப்பாளர் சிவநேசன் திருமதி சிவநேசன், கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தின் ஓய்வுபெற்ற தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பிரேமா மதுரநாயகம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

# மன்னார் மாந்தை மேற்கு தோட்டச் செய்கையின் அறுவடை நிகழ்வு



*(மன்னார் நகர் நிருபர்)*

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட தோட்டச் செய்கையின் உற்பத்திப் பொருட்களின் அறுவடை நிகழ்வு நேற்று முன்தினம் (4) செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதன்போது மன்னார் இரணை இலுப்பை குளத்தில் இஞ்சி அறுவடை விழா நடைபெற்றது.

பிரதம அதிதியாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டி மெல் கலந்துகொண்டார்.

மேலும், பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் (விரி) எஸ்.உதயச்சந்திரன், மன்னார் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் க.மகேந்திரன், மன்னார் மாவட்ட செயலக பிரதான கலாசார உத்தியோகத்தர் நித்தியானந்தன் ஆகியோரும் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இரணை இலுப்பை குளத்தைச் சேர்ந்த விவசாயிக்கு விவசாயத் திணைக்களம் வழங்கிய தூவல் நீர்ப்பாசன உபகரணத் தொகுதியின் உதவியுடன் விவசாயத் திணைக்களத்தின் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் அவர்களின் ஆலோசனைக்கு அமைவாக உற்பத்தி செய்யப்பட்டிருந்தது.

மேலும், வெங்காயம், பூசணிக்காய், கச்சான் கடலை, மிளகாய் உள்ளிட்டவையும் அறுவடை செய்யப்பட்டன.

# வவுனியா வைரவப்புளியங்குளம் ஆதி விநாயகர் ஆலயத்தில் விஜயதசமி



(வவுனியா நிருபர்)

நவராத்திரி விரதத்தின் இறுதி நாளான நேற்று விஜயதசமி தினத்தில் வவுனியா மாவட்டத்திலுள்ள ஆலயங்களில் விஜயதசமி பூஜையும், ஏடு தொடக்குதலும் சிறப்பாக இடம்பெற்றன.

கல்வி, செல்வம், வீரம் வேண்டி சரஸ்வதி, லட்சுமி, துர்க்கை ஆகிய மூன்று தேவியருக்கும் நவராத்திரி பூஜை இடம்பெற்று வந்தது. அந்த வகையில் நவராத்திரி பூஜையின் இறுதி நாளான நேற்று விஜயதசமி மற்றும் ஏடு தொடக்குதல் என்பன இடம்பெற்றன.

குறிப்பாக ஆலயங்களில் நேற்று (05) காலை தொடக்கம் மதியம் வரையிலான காலப்பகுதியில் பெருமளவான மக்கள் தங்களின் பிள்ளைகளுக்கு ஏடு தொடக்கினர்.

அந்த வகையில் வவுனியா வைரவப்புளியங்குளம் ஆதி விநாயகர் ஆலயத்தில் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ஜெ.மயூரக் குருக்கள் தலைமையில் அந்தணச் சிவாச்சாரியார்களால் விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று ஆதி விநாயகப் பெருமான் உள்வீதி வலம் வந்து வெளிவீதிக்கு காட்சி கொடுத்தார்.

நேற்று ஆலயத்திலும் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று, தமிழருவி சிவகுமாரனால் சிறுவர்களுக்கு ஏடு தொடக்கி வைக்கும் நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை மாணவர்களுக்கு போதைப்பொருள் விழிப்புணர்வு

*(சாவகச்சேரி நிருபர்)*

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி யில் நேற்று முன்தினம் (04) பாடசாலை மாணவர்க ளுக்கு போதைப்பொருள் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் ஹெல்தி லங்கா நிறுவன வட மாகாண இணைப்பாளர் ரீ.பிரேம்ராஜ் வளவாள ராகக் கலந்துகொண்டு பாடசாலை மாணவர்களுக்கு போதைப்பொருள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தியிருந்தார்.

## கருத்து கந்தசாமி

தோட்டத் தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்பணமாக 15 ஆயிரம் ரூபா வழங்குமாறு அரசியல்வாதிகள் குரல் எழுப்புவதை காணமுடிகிறது.

மேலோட்டமாக பார்த்தால் ஏதோ தொழிலாளர்களுக்கு போனஸ் பெற்றுக்கொடுப்பதைப்போல் அரசியல்வாதிகளின் பேச்சு இருக்கிறது.

தொழிலாளர்களின் சம்பள முற்கொடுப்பனவு என்பது அவர்களுக்கு செய்யும் உபகாரமல்ல. உபத்திரவம். இன்றைய பொருளாதார நிலையில் 15 ஆயிரம் ரூபாவை அவர்கள் முற்பணமாக பெற்றால் அவர்கள்தான் அவற்றை திருப்பிக் கட்டவேண்டும்.

ஏற்கனவே பொருளாதார சூழ்நிலையால் பாதிக்கப்பட்டுள்ளதால் மலையக பெருந்தோட்ட மக்கள் தீபாவளி முற்பணத்தை பெறுவதா அல்லது இருப்பதைக்கொண்டு சமாளிப்பதா என்பதை தாங்களல்லவா தீர்மானிக்க வேண்டும் ?



# செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கட்டளைக்கு அரசாங்க நிதி பற்றிய குழுவில் அனுமதி





இலங்கை முதலீட்டுச் சபை உரிய மதிப்பீடுகளை வழங்கத் தவறியமையால் கடந்த 03ஆம் திகதி அனுமதி கிடைக்கப்பெறாத 2008ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் 2291/25ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட கட்டளைக்கு நேற்று முன்தினம் (04) கூடிய அரசாங்க நிதி பற்றிய குழுவில் அனுமதி வழங்கப்பட்டது.

இந்த கலந்துரையாடலின்போது, சகல தகவல்கள் மற்றும் மதிப்பீடுகளுடன் குழு முன்னிலையில் ஆஜராகுமாறு முதலீட்டுச் சபைக்கு நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ த சில்வா தலைமையில் நேற்று முன்தினம் (04) அரசங்க நிதி பற்றிய குழு கூடியதுடன், முதலீட்டுச் சபை உரிய தகவல்களை முன்வைத்ததன் பின்னர் அது தொடர்பில் கருத்திற்கொண்டு அனுமதி வழங்கப்பட்டது.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட (2022 ஓகஸ்ட் 03) 2291/25ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட கட்டளை கடந்த செப்டெம்பர் 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

இதன்போது வர்த்தமானி அறிவித்தலுக்கு அனுமதி வழங்கப்பட்டாலும் முதலீட்டை மேற்கொள்ளும் நிறுவனத்துக்கு 17 வருடங்களுக்கு வரிச்சலுகை வழங்குவதன் அடிப்படை என்ன என்பதை சரியாக மதிப்பீடு செய்ய வேண்டும் எனவும் முதலீட்டின் அளவுக்கு வழங்கப்படும் வரிச் சலுகையை தீர்மானிக்கும் முறையான கொள்கையொன்று எதிர்காலத்தில் தயாரிக்கப்பட வேண்டும் எனவும் குழு சுட்டிக்காட்டியது.

அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, இராஜாங்க அமைச்சர்களான செஹான் சேமசிங்ஹ, கலாநிதி சுரேன் ராகவன், நாடாளுமன்ற உறுப்பினர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, சந்திம வீரக்கொடி, மயந்த திசாநாயக்க, ஹர்ஷன ராஜகருணா மற்றும் பேராசிரியர் ரஞ்சித் பண்டார ஆகியோரும் முதலீட்டுச் சபையின் தலைவர் ராஜா எதிரிசூரிய உள்ளிட்ட அதிகாரிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

### 05.10.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 12 8308 | 130 8851 |
| கனேடியன் டொலர் | 152 285 | 164 1273 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 38,63 4 | 41 607 |
| யூரோ | 244 5027 | 26 3672 |
| ஜப்பான் யென் | 1 3644 | 1 4662 |
| சிங்கப்பூர் டொலர் | 14 4847 | 150 0612 |
| ஸ்ரேலிங் பவுன் | 3 7 0686 | 313 2367 |
| சுவிஸ் பிராங்க் | 251 63 | 27 330 |
| ஐ.அ.டொலர் | 248 0507 | 258 80 2 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 851 4501 |
| குவைட் | குவைட் தினார் | 0,061 6526 |
| ஓமான் | ஓமான் றியால் | 831 4741 |
| கட்டார் | கட்டார் றியால் | 88,56 3 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 4305 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 6883 |

# அடக்குமுறைகளால் இந்த அரசாங்கம் விரைவில் ஆட்சியிலிருந்து வெளியேறவேண்டி ஏற்படும்

**பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதானவர்கள் தொடர்பில் துரித விசாரணைகள் அவசியம் என்கிறார் சாணக்கியன் எம்.பி.**

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் ஊடாக அரசாங்கம் தொடர்ந்தும் அடக்குமுறைகளை மேற்கொண்டால், விரைவிலேயே ஆட்சியிலிருந்து வெளியேற வேண்டிய நிலைமை ஏற்படும் - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் (04) இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஒஉட வறஉhழெடழபநைள டயமெய (pஎவ) டவன என்ற நிறுவனம் கடந்த 12 வருடங்களில் 5 ஆயிரத்து 325 ஊழியர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கியுள்ளனர். இது நாட்டிற்கு நல்லதொரு விடயம்தான்.

எனினும், வெளிமாவட்டங்களிலிருந்து குறிப்பாக மன்னார், யாழ்ப்பாணம் என வெளியிடங்களிலிருந்து வருகை தந்து இந்த நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் கொழும்பில் தங்களது அன்றாட வாழ்க்கையினை கொண்டுசெல்வதில் பெரும் இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

ஏனெனில், குறித்த ஊழியர்களுக்கு குறைந்த அளவிலேயே சம்பளம் வழங்கப்படுகின்றது. எனினும், தங்குமிடம், உணவு என ஊழியர்கள் அதிகளவில் பணத்தினை செலவழிக்கின்றனர். இதனால் குறைந்தளவான பணமே அவர்களிடம் எஞ்சியுள்ளது.

எனவே, கொழும்பிற்கு வெளியேயும் குறித்த நிறுவனம் தங்களது அலுவலங்களை திறந்தால், அவர்களின் வியாபாரம் விருத்தியடையும் என்பதுடன், நாடும் நன்மையடையும், ஊழியர்களும் நன்மையடைவார்கள். அத்துடன், இளைஞர்களின் எதிர்காலத்தினை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

பொருளாதார நெருக்கடிக்கு நிலையான தீர்வுகாண அரசாங்கம் பொருத்தமான கொள்கைகளை வகுக்கவில்லை.

ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சட்டத்தை திருத்தம் செய்வதால் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியாது.

கடந்த ஓரிரு மாதங்களில் ஏற்றுமதி வருமானம் அதிகரிக்கப்பட்டுள்ளது என அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஏற்றுமதி அதிகரிக்கப்படவில்லை, மாறாக, ஏற்றுமதி கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் தவறான பொருளாதார முகாமைத்துவ தீர்மானங்களினால் அந்நிய செலாவணி மற்றும் சுற்றுலாத்துறை வருமானம் வீழ்ச்சியடைந்தது.

சட்டத்திருத்தங்கள் செய்வதால் மாத்திரம் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியாது. கொள்கை ரீதியில் நடைமுறைக்கு பொருத்தமான திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதை தவிர்த்துவிட்டு அரசாங்கம் போராட்டத்தில் ஈடுப்பட்ட இளைஞர், யுவதிகளை பின்தொடர்ந்து செல்கிறது. நாம் கடந்த சில நாட்களுக்கு முன்னர், காங்கேசன்துறையிலிருந்து ஹம்பாந்தோட்டைவரை, பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிராக கையெழுத்து பெறும் போராட்டத்தை மேற்கொண்டிருந்தோம்.

இன்று நாட்டிலுள்ள அனைத்து மக்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு உணவுகூட இன்று இல்லை.

மேலும், வசந்த முதலிகே உள்ளிட்ட போராட்டத்தின் ஈடுபட்ட பல இளைஞர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் ஊடாக கைது செய்யப்பட்டுள்ளார்கள். 47 நாட்களாக இவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் செய்த தவறு என்ன என்பதை நாடாளுமன்றில் வெளிப்படுத்த வேண்டும்.

2019 ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் என 300 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் இந்தச் சட்டத்தால் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் தொடர்பான விசாரணைக்கு என்ன நடந்தது? அந்த இளைஞர்கள் செய்த தவறு என்ன?

பல தமிழ் இளைஞர்கள் வருடக்கணக்கில் சிறையில் உள்ளார்கள். அவர்களை விடுதலை செய்யவேண்டும். அல்லது அவர்களின் வழக்கு விசாரணைகளையேனும் துரிதப்படுத்த வேண்டும். 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் இருந்து அரசாங்கத்திற்கு எதிராக கருத்து வெளியிடுவோர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் கைதுசெய்யப்படுகிறார்கள்.

# பிம்ஸ்டெக்கின் 25ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு



வங்காள விரிகுடா தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான முன்முயற்சியின் (பிம்ஸ்டெக்) 25ஆவது ஆண்டு நினைவாக லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவனத்துடன் இணைந்து வெளிநாட்டு அமைச்சு நேற்று முன்தினம் (04) நிகழ்வொன்றை லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவனத்தில் ஏற்பாடு செய்திருந்தது.


இந்நிகழ்வுக்கு தெற்காசிய பொருளாதார மாதிரியாக்க வலையமைப்பு மற்றும் இன்ரீச் குளோபல் ஆகியன ஆதரவளித்தன.

இந்நிகழ்ச்சியில் முக்கிய பேச்சாளராக கலந்து கொண்ட வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய, இந்த ஆண்டு மார்ச் மாதம் இலங்கையில் நடைபெற்ற 5ஆவது பிம்ஸ்டெக் உச்சிமாநாடு தொடங்கி, ஏறக்குறைய ஆறு மாதங்களுக்குப் பிறகு, இந்த நிகழ்வை இலங்கை நடத்துவது குறிப்பிடத்தக்க மற்றும் முக்கியமான தருணம் எனக் குறிப்பிட்டார்.

ஓர்அமைப்பாக பிம்ஸ்டெக் கடந்த காலத்தில் அளித்த பங்களிப்பின் அம்சங்கள் மற்றும் இன்றைய பிம்ஸ்டெக்கின் பொருத்தம் மற்றும் முக்கியத்துவம் குறித்ததாக அமைச்சரின் முக்கிய உரை அமைந்திருந்தது.

தென்கிழக்காசிய பிராந்திய மானது உலகில் வேகமாக அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களில் ஒன்றாக இருப்பதாகவும், பொது கலாசாரம், பொதுவான மத நடைமுறைகள், வளமான வரலாறு மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட நாகரிகத் தொடர்புகள் ஆகியவற்றை பிம்ஸ்டெக் கொண்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தனது உரையில் தெரிவித்தார்.

எந்தவொரு பிராந்திய முகாமின் வெற்றியும் அதன் உறுப்புநாடுகளின் மக்களின் நல்வாழ்வுக்கான பங்களிப்பின் அடிப்படையில் அமையுமென மீண்டும் வலியுறுத்திய இராஜாங்க அமைச்சர், பிம்ஸ்டெக்கின் வரவிருக்கும் வேலை நிகழ்ச்சி நிரல்களின் மூலம் இந்த நோக்கத்தை அடைய முடியும் என்றும், உறுப்புநாடுகளின் மக்களுக்கு சேவையை விரிவுபடுத்தும் உன்னதப் பொறுப்பை நோக்கி நிறுவனத்தை வழிநடத்த முடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.






**உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு அநுராதபுரம் திறப்பனை குளக்கரை ஓரத்தில் திறப்பனை பிரதேச சபையினரும் அநுராதபுரம் கரிட்டாஸ் செத்சவிய அமைப்பினரும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த மரநடுகையில் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றிருந்தது. (படம்- அநுராதபுரம் செய்தியாளர்)**





**கெக்கிராவ கல்வி வலயத்திலுள்ள மரதன்கடவல அல்-அமீன் முஸ்லிம் வித்தியாலயத்தில் ஒழுங்கு செய்திருந்த உலக சிறுவர் தின நிகழ்வு வித்தியாலய அதிபர் எஸ்.எம்.கவுஸின் தலைமையில் வித்தியாலய பிரதான மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. (படங்கள் - அநுராதபுரம் செய்தியாளர்)**

# ஜெம்பட்டா வீதி முனீஸ்வரர் முத்துமாரியம்மன் ஆலயத்தில் நவராத்திரி விசேட பூஜை வழிபாடுகள்

**(மொஹமட் நசார்)**

நவராத்திரி விழாவை முன்னிட்டு கொழும்பு, ஜெம்பட்டாவீதி அருள்மிகு ஸ்ரீ முனீஸ்வரர் முத்துமாரியம்மன் ஆலயத்தில் நேற்று முன்தினம் (04) விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

சர்வசாதகம், சர்வபோதகம் பிரம்ம ஸ்ரீ விஷ்வ நாராயண குருக்களின் பங்குபற்றுதலுடன் சாரதா நவராத்திரி விழாவும் நவாரண ஸ்ரீ சக்கர பூஜையும் நவசக்தி மஹா ஹோமமும் கடந்த 26ஆம் திகதி ஆரம்பமானது.

அதனைத் தொடர்ந்து தொடர்ச்சியாக ஒன்பது நாட்கள் பூஜை வழிபாடுகள் நடைபெற்றுவந்த நிலையில் நவசக்தி ஹோமம் பூர்த்தி நேற்று ஆலயத்தில் நடைபெற்றது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சிவனேச குருக்கள் உள்ளிட்ட சிவாச்சாரியார்களால் பூஜை வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. கனடா டொரண்டோ ஸ்ரீ வரசித்திவிநாயகர் ஆலய முதல்வர் சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள் மற்றும் அவரது பாரியார் தம்பதியினரின் ஷஷ்டியப்த பூர்த்தி மணிவிழா கௌரவிப்பும் இதன்போது இடம்பெற்றது.

துர்க்கை, லக்ஷ்மி, சரஸ்வதி ஆகிய முப்பெரும் தேவியருக்கு வசந்த மண்டப அலங்கார சிறப்பு தீபாராதனைகள் கடந்த ஒன்பது நாட்கள் இடம்பெற்றன.





நேற்று (05) காலை விசேட நவகலச அபிஷேகத்தை தொடர்ந்து வித்தியாரம்பம் ஏடு தொடக்கம் நடைபெறவுள்ளது.

## தீபாவளி முற்பணம் கோரி ஜனாதிபதிக்கு கடிதம்

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்பணமாக 15 ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரி, கடிதமொன்றை இலங்கை தோட்டத் தொழிலாளர் யூனியன் பொதுச் செயலாளரும் பெரும் தோட்ட தொழிற்சங்க கூட்டமைப்பின் செயலாளர் நயகமுமான எஸ். இராமநாதன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தோட்டத் தொழில் அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கண்ட கோரிக்கை விடுத்துள்ளார்.

இராமநாதன் தொடர்ந்து தனது கடிதத்தில், பொருளாதாரப் பிடியில் சிக்குண்டுத் தவிக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கு இத்தீபாவளி முற்பணத்தை வழங்குவதன் மூலம் பொருளாதார ரீதியில் அல்லற்படும் தொழிலாளர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் இது பேருதவியாக இருக்கும் என குறிப்பிட்டுள்ளார்.

# ஊழல் மோசடியில் ஈடுபடுவதாக மட்டு. இ.போ.ச. பிரதி முகாமையாளருக்கு ஊழியர்கள் எதிர்ப்பு

## இடமாற்றக் கோரி பணிப்பகிஷ்கரிப்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு இலங்கை போக்குவரத்து சபையில் ஊழல் மோசடியில் ஈடுபட்டுவரும் பிரதி முகாமையாளரை இடமாற்றக் கோரி நேற்று (05) போக்குவரத்து சபையின் நடத்துநர்கள், சாரதிகள் மற்றும் ஊழியர் சங்கங்கள் இணைந்து பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

மட்டு. போக்குவரத்து சபையில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் கைதுசெய்யப்பட்ட முன்னாள் முகாமையாளரின் கீழ் செயற்பட்டுவந்த பிரதி முகாமையாளர் இலஞ்ச ஊழல் மோசடியில் ஈடுபட்டுவருவதுடன், தொழிலாளிகளை பழிவாங்கும் செயற்பாட்டின் ஓர் அங்கமாக 10 நடத்துனர்களை வேலையில் இருந்து பணிநீக்கம் செய்துள்ளார்.

இதேவேளை தொடர்ந்தும் பல ஊழல் மோசடிகளில் இவர் ஈடுபட்டுவருவதால் ஆதாரங்களுடன் இவரை இடமாற்றக்கோரி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கடந்த மாதம் கடிதம் அனுப்பிவைத்தோம்.






இதுவரையும் இவருக்கு எதிராக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாததால் இன்று இங்குள்ள 4 தொழிற்சங்கங்களும் இணைந்து இவரை இடமாற்றக்கோரி வெளிமாவட்ட மற்றும் குறுந்தூர பஸ் போக்குவரத்து சேவையில் ஈடுபடாது இந்த பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவருகின்றோம். இந்த நிலையில், உதவி முகாமையாளர் எங்களுக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்து எங்களைக் கைதுசெய்ய நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றார். இருந்தபோதும், எமக்கு நீதி கிடைக்கும்வரை இந்த பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் தொடர்ந்து இடம் பெறுமென தொழிற்சங்கத் தலைவர் துரைராஜா தெரிவித்தார்.

# திருகோணமலை அல்ஹுலூர் ஜும்மா பள்ளிவாசலில் சர்வமத கலந்துரையாடல்



(அப்துல்சலாம் யாசீம்)

பள்ளிவாசல் சுற்றுப்பயணம் மூலம் முஸ்லிம்களுக்கும் பிற சகோதர மதத்தினருக்கும் இடையே உறவுப்பாலங்களை உருவாக்குவதற்கான தனித்துவமான சர்வமத நிகழ்வொன்று திருகோணமலையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வு திருகோணமலை - அநுராதபுர சந்தி அல்ஹுலூர் ஜும்மா பள்ளிவாசலில் நேற்று (05) காலை 9.30 மணி முதல் பி.ப. 2.30 மணிவரை இடம்பெற்றது. இதன்போது பள்ளிவாசலைத் தரிசித்தல், வணக்க வழிபாடுகளை நேரடியாக காண்பித்தல், இஸ்லாம் பற்றிய தப்பான அபிப்பிராயங்களை தெளிவுபடுத்தல், முஸ்லிம்களின் கட்டடக்கலை வரலாறு, ஆன்மீக விழுமியங்கள் போன்றவற்றை அறிந்துகொள்ளல் போன்றவற்றை விளக்க இஸ்லாமிய வாழ்க்கை வரலாறு பற்றிய சுவரொட்டிகள் காட்சிப்படுத்தப்பட்டதுடன், தொழுகை எவ்வாறு மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும் நேரடியாக காண்பிக்கப்பட்டது.

இதன்போது திருகோணமலை மறை மாவட்ட ஆயர் இமானுவேல், பௌத்த மதத்தைச் சேர்ந்த மதகுருமார், பாடசாலை மாணவர்கள் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# அக்கரைப்பற்றில் முதியோர் தினத்தில் 100 வயது முதியவர் கௌரவிப்பு



(அக்கரைப்பற்று நிருபர்)

அக்கரைப்பற்று பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த சிறுவர், முதியோர் தின நிகழ்வு பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்சாரின் வழிகாட்டலில் சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.பி.எம்.ஹுசைன் தலைமையில் பிரதேச செயலகக் கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது அக்கரைப்பற்று 12ஆம் பிரிவைச் சேர்ந்த 100 வயதுடைய எம்.ஐ.எம்.இஸ்மாயில் எனும் முதியவருடன் மற்றும் பல முதியோர்களும், சிறுவர்களும் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்சார், நிர்வாக உத்தியோகத்தர் என்.ரி.பாறூக், தலைமைப்பீட முகாமையாளர் எம்.பி.எம்.ஹுசைன், கருத்திட்ட முகாமையாளர் என்.ரி.மசூர், திட்ட முகாமையாளர் எம்.ஜே.எம்.நிஹ்மதுல்லாஹ், கணக்காளர் எஸ்.எல்.சர்தார் மிர்சா, உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் இசட்.ஏ.ரஹ்மான், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம்.தமீம், சமுதாய அடிப்படை அமைப்பு உத்தியோகத்தர் எம்.எச்.எப்.சஜித்தா, சமூக அபிவிருத்தி உதவியாளர் எம்.ஐ.சபாயுத்தீன், வலய உதவியாளர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

# காத்தான்குடியில் 15 வயது சிறுமியை வன்புணர்வுக்குட்படுத்திய இளைஞர் கைது

## எதிர்வரும் 18 வரை விளக்கமறியல்

(கனகராசா சரவணன்)

காத்தான்குடியில் 15 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்ட சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட 22 வயதுடைய இளைஞனை எதிர்வரும் 18ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் நேற்று முன்தினம் (04) உத்தரவிட்டார்.

காத்தான்குடி பிரதேசத்தில் 15 வயது சிறுமியைக் காதலிப்பதாகத் தெரிவித்து துஷ்பிரயோகம் மேற்கொண்டுள்ளதாக பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், குறித்த இளைஞன் கைதுசெய்யப்பட்டு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து அவரை எதிர்வரும் 18 ஆம் திகதிவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை மீன்பிடித்துறை அமைச்சில், நாடாளுமன்ற உறுப்பினர் தௌபீக் மற்றும் குச்சவெளிப் பிரதேச சபை உறுப்பினர் பளீல் அமீன் ஆகியோர் சந்தித்து, குச்சவெளிப் பிரதேச மீனவர்கள் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதில் எதிர்கொள்ளும் சிரமங்களையும் அதனை நிவர்த்திப்பதற்கான வழிமுறைகள் தொடர்பிலும் கலந்துரையாடினர்.
(படம் - திகாமடுல்ல நிருபர்)

# பீபா உலகக்கிண்ணத்திலிருந்து ஈரானை வெளியேற்ற வேண்டுகோள்



(ரமணி)

கட்டாரில் எதிர்வரும் நவம்பர் 20ஆம் திகதி ஆரம்பமாகும் பீபா உலகக்கிண்ணத்தில் இருந்து ஈரானை வெளியேற்ற வேண்டும் என்று மனித உரிமைகள் குழு மற்றும் திறந்தவெளி மைதானங்கள் பீபாவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன.

கடந்த வியாழக்கிழமை பீபா தலைவர் கியானி இன்ஃபான்டினோவுக்கு அனுப்பிய கடிதத்தில் விளையாட்டு நிர்வாகக் குழுவின் அழுத்தம் இருந்தபோதிலும் ஈரானிய அதிகாரிகள் நாட்டிற்குள் விளையாட்டுகளின்போது பெண் ரசிகர்களை அனுமதிக்க மறுத்து வருவதாக அந்த அமைப்புகள் தெரிவித்துள்ளன.

ஈரான் முழுவதும் பல நகரங்களில் பொலிஸ் காவலில் இளம் பெண் இறந்ததற்கு எதிராக போராட்டங்கள் தொடர்ந்த நிலையில், மாநில மற்றும் சமூக ஊடகங்கள் இவ்வாறு செய்திகளை வெளியிட்டுள்ளன. கிட்டத்தட்ட இரண்டு வார ஆர்ப்பாட்டங்களில் குறைந்தது 83 பேர் கொல்லப்பட்டதாக மனித உரிமைகள் குழு தெரிவித்துள்ளது.

ஈரானில் உதைபந்தாட்டப் போட்டிகளில் பெண்கள் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட வேண்டும் என்று கடந்த தசாப்தத்தில் திறந்தவெளி மைதானங்கள் பிரசாரம் செய்து வருகின்றன. கடந்த மார்ச் மாதத்தில் லெபனானுக்கு எதிரான ஈரானின் உலகக்கிண்ண தகுதிச்சுற்று ஆட்டத்தில் பெண் ரசிகர்கள் நுழையத்தடை விதிக்கப்பட்டதால் பெண் ரசிகர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். ஈரான் தனது ஆறாவது உலகக் கிண்ணத்தில் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# தென்னாபிரிக்கா ஆறுதல் வெற்றிபெற T20 தொடர் இந்தியா வசம்




இந்திய அணியுடனான 3 போட்டிகள் கொண்ட இருபக்கு 20 தொடரின் மூன்றாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி ஆறுதல் வெற்றிபெற இந்திய அணி தொடரை 2-1 என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

முதலிரு ஆட்டங்களில் வெற்றி பெற்று இந்திய அணி தொடரைக் கைப்பற்றிய நிலையில், மூன்றாவதும் இறுதியுமான போட்டி நேற்று முன்தினம் இந்தூரில் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி ரிலீ ரோசோவ்வின் அதிரடி சதத்துடன் 20 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட் இழப்பிற்கு 227 ஓட்டங்களைக் குவித்தது.

இதையடுத்து 228 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணி 18.3 ஓவர்கள் முடிவில் 178 ஓட்டங்களுக்குள் சுருண்டு போனது. இதன்மூலம் தென்னாபிரிக்க அணி 49 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆறுதல் வெற்றிபெற இந்திய அணி தொடரை வென்றது. இரு அணிகளுக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

## இன்னும் 10 நாட்கள்

ICC MEN'S T20 WORLD CUP AUSTRALIA 2022

# T10 கிரிக்கெட் தொடரில் சம்பியனான நிந்தவூர் இம்ரான் வி.க.




(மாளிகைக்காடு நிருபர்)

நிந்தவூர் சதாம் விளையாட்டுக் கழகத்தின் 32ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட சதாம் T10 கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நிந்தவூர் இம்ரான் விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது.

அணிக்கு 11 பேர் கொண்ட 10 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் 32 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றி இறுதிப் போட்டிக்கு நிந்தவூர் இம்ரான் விளையாட்டுக் கழகமும் கல்முனை லெஜன்ட்ஸ் விளையாட்டுக்கழகமும் தெரிவாகின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கல்முனை லெஜன்ட்ஸ் விளையாட்டுக்கழகம் முதலில் துடுப்பெடுத்தாடி 10 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட் இழப்பிற்கு 120 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நிந்தவூர் இம்ரான் விளையாட்டுக் கழகம் 9.5 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்களை மட்டுமே இழந்து வெற்றியை தனதாக்கிக்கொண்டது. நிந்தவூர் பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சீ.பைசால் காசிம் பிரதம அதிதியாக கலந்துகொண்டு பரிசில்களை வழங்கிவைத்தார்.




வெற்றிபெற்ற இம்ரான் விளையாட்டுக் கழகத்திற்கு ரூ.30 ஆயிரம் காசோலையும் வெற்றிக் கிண்ணமும் இரண்டாம் இடத்தைப்பெற்ற லெஜன்ட்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கு ரூ.20 ஆயிரம் காசோலையும் கிண்ணமும் அதிதிகளினால் வழங்கிவைக்கப்பட்டன.

# YESDO மின்னொளி கிரிக்கெட் சுற்றுப் போட்டி



YESDO அமைப்பின் ஏற்பாட்டில் 2005 (O/L) Batch நண்பர்களிடையே நடத்தப்பட்ட சினேகபூர்வ கிரிக்கெட் சுற்றுப் போட்டி அண்மையில் ஆரையம்பதி விளையாட்டு மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்றது. அணிக்கு 11 பேர் கொண்ட 8 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட இச்சுற்றுப் போட்டியில் MOON FIRE, GOLD STAR மற்றும் SUN SHINE ஆகிய மூன்று அணிகள் பங்குபற்றின.

இறுதிப்போட்டிக்கு தெரிவாகிய MOON FIRE மற்றும் GOLD STAR அணிகளிடையே ஆரம்பத்தில் துடுப்பெடுத்தாடிய MOON FIRE அணி 8 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை இழந்து 57 ஓட்டங்களை பெற்றுக் கொண்டதுடன், பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய GOLD STAR அணி 4 ஓவர்கள் நிறைவில் விக்கட் இழப்பின்றி 58 ஓட்டங்களைப் பெற்று சுற்றுப் போட்டியின் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரராக A.N.M Nabris , சிறந்த பந்து வீச்சாளராக M.H.M Nisfar ஆகிய வீரர்கள் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



கொழும்பு கிங்ஸ் இளைஞர் கழகம் முதன்முறையாக ஏற்பாடு செய்த சர்வதேச சிறுவர் தின நிகழ்வு, கொழும்பு-12 சவுண்டர்ஸ் பார்க் விளையாட்டு மைதானத்தில் கழகத்தின் தலைவர் எம்.எம்.சாபி மற்றும் செயலாளர் றிஸானா ஆசிரியர் ஆகியோரின் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கொழும்பு மாநகர சபையின் பிரதி மேயர் எம்.ஐ. இக்பால் கலந்துகொண்டார். கௌரவ அதிதிகளாக டாம் வீதி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஹஜித் பேதுரு ஆரச்சி மற்றும் மேல் மாகாண பொலிஸ் பிரிவின் பிரதிநிதி உட்பட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (படங்கள் - ஏ.எஸ்.எம்.ஜாவித்)

# கிண்ணையடி காட்டுப்பகுதியில் கசிப்பு காய்ச்சிய ஒருவர் கைது

## 108.5 லீற்றர் கோடா – 4.5 லீற்றர் கசிப்பு மீட்பு





(வாழைச்சேனை நிருபர்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவின் கிண்ணையடி குட்டிக்காடு எனும் காட்டுப் பிரதேசத்தில் வாழைச்சேனை ஊழல் ஒழிப்பு பொலிஸ் பிரிவினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவரை கைதுசெய்துள்ளனர்.

ஏனையோர் தப்பி ஓடியுள்ளதாகவும் அவர்களை கைதுசெய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதன்போது 1,08,500 மில்லி லீற்றர் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படும் கோடாவும், 4,500 மில்லி லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்து வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லசந்த பண்டாரவின் வழிகாட்டலில் பிரதேசத்தில் இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட நபர் மற்றும் பொருட்கள் வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் சமர்பிப்பதற்கான நடவடிக்கையை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# திருமலை மாவட்ட மீனவர்களுக்கு நிவாரணம் வழங்குவதில் அநீதி

## நீதி கோரி மகஜர் வழங்க கையொப்பம் சேகரிப்பு









(ரவ்பீக் பாயிஸ்)

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் நிதி மூலம் மீனவர்களுக்கு வழங்கப்படவுள்ள நிவாரணம் தொடர்பில் திருகோணமலை மாவட்ட சிறுமீன்பிடி மீனவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கு விசாரணை வேண்டும் எனவும் மகஜரில் கையொப்பம் சேகரிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (04) திருகோணமலை மணிக்கூட்டு கோபுர சந்தியில் இடம்பெற்றது.

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் நிதி உதவியை சிறுமீன்பிடி சிறுதொழில் மற்றும் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் அனைவருக்கும் பெற்றுக்கொடு எனும் தொனிப்பொருளில் குறித்த கையொப்பம் சேகரிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

இலங்கையில் மிகவும் ஆபத்து நிலைக்கு உட்படக்கூடிய மாவட்டங்களிலுள்ள மீனவர்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்காக மாதாந்தம் ரூபா 15,000 பிரகாரம் மூன்று மாதங்களுக்கு வழங்குவதை அரசு வழங்க முன்வந்துள்ளதை நாம் பெரிதும் மதிக்கின்றோம் என அகில இலங்கை பொது மீனவர்கள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

எனினும், மீன்பிடி மற்றும் நீரியல் வள திணைக்களத்தின் ஊடாக இயந்திரமில்லாத மீன்பிடிப் படகுக்காரர்களுக்கு இந்நிதியுதவி வழங்கப்பட்டாலும், அது திருகோணமலையில் முறையாக செயல்படுத்தப்படாமை குறித்து தாம் கவலையடைவதாக அகில இலங்கை பொது மீனவர்கள் சம்மேளனம் கவலை தெரிவித்துள்ளது.

இயந்திரமில்லாத படகுக்காரர்களின் பட்டியலைத் தயாரித்த மீன்பிடித் திணைக்களம், திருகோணமலை மாவட்டத்தின் 1,758 மீனவர்களில் 783 பெயர்களை மட்டும் தெரிவுசெய்திருப்பதில் ஏனைய மீனவர்களுக்கு பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஏற்படும் முறைகேடுகளை பரீட்சிப்பதற்காக கண்காணிப்புக் குழுக்கள் உங்கள் நிதியத்தின் பெயரில் செயல்பட்டாலும், அவர்களின் பரிசோதனை நடவடிக்கைகளும் கூட பக்கச்சார்பு இல்லாத முறையில் நடைபெறவில்லை. பரிசோதகர்கள் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் போதுமான தலையீட்டை மேற்கொள்ளவில்லை என குறித்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே தாம் கோருவது இயந்திரமில்லாத மீன்பிடிப் படகுகளை பாவிக்கும் மீனவர்கள் என்ற வகையில் எங்கள் அனைவருக்கும் இந்நிதியுதவி கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது தமது வேண்டுகோளாக இருப்பதாகவும் அகில இலங்கை பொது மீனவர்கள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

மேலும் பெயர்ப் பட்டியலைத் தயாரிக்கும் போது ஏனைய மீனவர்களின் பெயர்கள் எவ்வாறு தவறிப்போனது என்பதை விசாரணை மேற்கொள்ளுமாறும் அகில இலங்கை பொது மீனவர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் மகஜரில் கையொப்பம் சேகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பல்கலைக்கு தெரிவாகிய மாணவர்கள் மட்டு. வர்த்தக சங்கத்தினால் கௌரவிப்பு







(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு வர்த்தகர் சங்கம் நடத்தும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் 2021ஆம் வருடத்தில் உயர் பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கான விசேட கௌரவிப்பு விழா மட்டக்களப்பு ஈஸ்ட் லகூன் விடுதியில் மிகப் பிரம்மாண்டமான முறையில் நேற்று முன்தினம் (04) இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு வர்த்தக சங்கத் தலைவரும் சமூக சேவையாளருமான தேசபந்து முத்துலிங்கம் செல்வராஜா தலைமையில் இடம்பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் குறித்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ.திசாநாயக்க மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன், மாணவர்களுக்கான கௌரவிப்பினையும் வழங்கினர்.

கடந்த வருடம் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றினைப் பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ள 163 மாணவர்களுக்கு இதன்போது பொன்னாடை போர்த்தி பதக்கங்கள் அணிவித்து நினைவுச்சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் உயிரியல் விஞ்ஞான துறையில் அகில இலங்கை ரீதியில் முதலாவது இடத்தைப் பெற்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த மட்டக்களப்பு புனித மிக்கேல். கல்லூரி தேசிய பாடசாலையின் மாணவன் தமிழ்வாணன் துவாரகேஷ், பௌதிக விஞ்ஞான துறையில் அகில இலங்கை மட்டத்தில் நான்காவது இடத்தையும் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் சாதித்த செங்கலடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் மாணவன் லோகிதன் கிசோபன் மற்றும் கதிரவெளி விக்னேஸ்வரா மாணவன் எஸ்.டினுகரன் ஆகியோர் இதன்போது விசேட நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்கள்.

நிகழ்விற்கு அதிதிகளாக கலந்துகொண்டவர்களை வர்த்தக சங்கத்தினர் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னங்கள் வழங்கி கௌரவித்ததுடன், இச்சிறப்பான சாதனை மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வினை திறம்பட நிகழ்துவதற்கு காரணகர்த்தாவாக இருந்த மட்டக்களப்பு வர்த்தக சங்கத் தலைவரும் சமூக சேவையாளருமான தேசபந்து எம்.செல்வராஜாவை வர்த்தக சங்கத்தினர் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


குறித்த நிகழ்விற்கு கௌரவ அதிதிகளாக கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி என்.புள்ளைநாயகம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வள்ளிபுரம் கனகசிங்கம், மட்டக்களப்பு மாநகர மேயர் தியாகராஜா சரவணபவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

விசேட அதிதிகளாக மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார், மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி.அகிலா கனகசூரியம், கல்குடா வலயக்கல்விப் பணிப்பாளர் தினகரன் ரவி, மட்டக்களப்பு மத்தி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.எஸ்.உமர் மௌலானா மற்றும் பட்டிருப்பு வலயக்கல்விப் பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) செபமாலை மகேந்திரகுமார், பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜீ.சுகுணன், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கே.கலாரஞ்ஜனி, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் திருமதி புளோரன்ஸ் பாரதி கெனடி, பிரதேச செயலாளர் யூ.உதயஸ்ரீதர் ஆகியோர் கலந்து சிறப்பித்ததுடன், அதிபர்கள், ஆசிரியர்கள், சாதனை படைத்த மாணவர்களின் பெற்றோர், சமூக ஆர்வலர்கள், துறைசார் திணைக்கள உயரதிகாரிகள் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்த வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகள் என 500இற்கு மேற்பட்டோர் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வாழைச்சேனையில் டெங்கு ஒழிப்பு கள விஜயம்







(வாழைச்சேனை நிருபர்)

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தினை முன்னிட்டு வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி ஜி.சுகுணனின் ஆலோசனையின்பேரில் டெங்கு ஒழிப்புக்கான கள பரிசோதனை நடவடிக்கைகள் நேற்று முன்தினம் (04) பேத்தாழை கிராமத்தில் ஆரம்பமாகின.

வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சிகப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்ட கிராமசேவையாளர் பிரிவுகளில் இந்நடவடிக்கையானது மேற்கொள்ளப் படவுள்ளதாக வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி ஸ்ரீ சஞ்ஜீவ் தெரிவித்தார்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், கடல்படையினர், பிரதேச சபை ஊழியர்கள் மற்றும் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் 10 குழுக்களாக இணைந்து வீடு வீடாகச் சென்று டெங்கு நுளம்பின் தாக்கம் இருக்கும் இடங்களை அடையாளம் கண்டு அவற்றினை அழிப்பதுடன், டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வு ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றனர்.

இன்றைய ஆரம்ப நிகழ்வில் பிராந்திய தொற்று நோயியல் வைத்தியர் வே.குணராஜசேகரம், மாவட்ட பூச்சியியலாளர் திருமதி தர்சினி குணசீலன் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

# அல்-குர்ஆனை மனனம் செய்த மாணவி றிம்ஸா கௌரவிப்பு




(மீராவோடை நிருபர்)

ஓட்டமாவடியில் இயங்கிவரும் மத்ரஸது ஸைத் பின் தாபித் அல்-குர்ஆன் பகுதிநேர மனனப் பிரிவில் இணைந்து அல்-குர்ஆனை மனனம் செய்த மாணவி எஸ்.ஏ.பாத்திமா றிம்ஸாவை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை(02) இடம்பெற்றது.

மத்ரஸாவின் அதிபர் அல்-ஹாபிழ் ஏ.எல்.நிஜாம்தீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மத்ரஸாவின் நிர்வாகத்தினர், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மாணவர்களின் கலை, கலாசார நிகழ்ச்சிகளுடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாணவி றிம்ஸாவுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தில் வாணிவிழா!



(கந்தளாய் நிருபர்)

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வாணி விழா கடந்த திங்கட்கிழமை (03) கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி (திருமதி) இ.ஸ்ரீதர் தலைமையில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள திட்டமிடல் அதிகாரிகளான வைத்தியர் எஸ்.சிவச்செல்வன், வைத்தியர் எஸ்.சதீஸ், கணக்காளர் (திருமதி) வி.சங்கீதா, நிர்வாக உத்தியோகத்தர் சிவவதனா நவேந்திர ராஜா, பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் திருமதி அன்பலகன் தேவராணி உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் என பலரும் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.


## போடியார் புலம்பல்!



***அரசாங்கத்த கெதியா வீழ்த்துவோம் எண்டு பேராசிரியர் பீரிஸ் எம்.பி. சொல்லியிருக்காரு எலுவா? இது ஒரு பம்மாத்து கத அவளவுதான்.***

***வாயால சொல்லிறத உட்டுப்போட்டு எங்க பாப்பம் அத ஏதுமண்டா செய்யுங்க பாப்பம் ..? அது பனங்காட்டு நரி இல்ல ராஜபக்ஷ நரி. உங்களுக்கும் குழி வெட்டும் கவனம்..!***

# மகளிர் அபிவிருத்தி சங்கப் பிரதிநிதிகளை வலுவூட்டும் செயலமர்வு இறக்காமத்தில்





(மாளிகைக்காடு நிருபர்)

இலங்கையில் பாலியல் பாலின அடிப்படையிலான வன்முறைகளைத் தனிக்கவும், சமூக ஒற்றுமையை மேம்படுத்தவும் பெண்களை அதிகாரமளித்தல் எனும் கருப்பொருளின் கீழ் 'கிழக்கு திரிய பெண்கள் அபிவிருத்தி மன்றத்தினால்' தெரிவு செய்யப்பட்டு பெண்கள் அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகளுக்கான ஒருநாள் வலுவூட்டல் செயலமர்வு இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.ரஷ்ஷான் (நளீமி) தலைமையில் நேற்று முன்தினம் (04) பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட நலிவுற்ற மற்றும் பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களில் ஏற்படும் பாலின அடிப்படையிலான வன்முறைகள், அவற்றை குறைப்பதற்கான வழிமுறைகள், குடும்ப சமூக ஒற்றுமையை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள், பெண்களுக்கான சட்ட ஆலோசனைகள், குடும்ப வன்முறைகளினால் ஏற்படும் உளவியல் பிரச்சினைகளும் அவற்றுக்கான ஆலோசனைகளும் போன்ற தலைப்புகளை உள்ளடக்கி இச்செயலமர்வு நடத்தப்பட்டது.

இச்செயலமர்விற்கு வளவாளர்களாக நிறுவனத்தின் ஆலோசகர் சட்டத்தரணி ஏ.சாஜித் அஹமட், சட்டத்தரணி எல்.கலைவாசனா (சட்ட உதவிகள் ஆணைக்குழு), சமூக செயற்பாட்டாளர் ஐ.எல்.ஹாசிம் சாலிஹ், உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.எச்.றகீப், செயற்றிட்ட உத்தியோகத்தர் பி.எம்.கலாமுடீன் (சட்ட உதவிகள் ஆணைக்குழு) ஆகியோர் கலந்துகொண்டனர்.

கிழக்கு திரிய பெண்கள் அபிவிருத்தி மன்றம் நிறுவனத்தின் செயற்றிட்ட முகாமையாளர் திருமதிசமந்தி அமுன உடகெதர, வெளிக்கள உத்தியோகத்தர் திருமதி சமாலி, வெளிக்கள உதவியாளர் பூர்ணிமா ஆகியோர் செயலமர்வை வழிப்படுத்தினர். இறக்காமம் பிரதேச செயலக பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவின் பெண்கள் அபிவிருத்தி வெளிக்கள உத்தியோகத்தர் ஆர்.எஸ்.றிம்ஸியா ஜஹான், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் எஸ். சபறுல் ஹஸீனா உள்ளிட்டோர் கலந்துகொண்டு செயலமர்வை நெறியாள்கை செய்தனர்.

# கோட்டைக்கல்லாறு வித்தியாலயத்தில் கலை விழா



(பாண்டிருப்பு நிருபர்)

பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தில் கலைமகள் கலை விழா, நவராத்திரி விசேட பூசை வழிபாடுகள் வித்தியாலய அதிபர் க.செல்வராசா தலைமையில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் பிரதி அதிபர்களான சண்முகநாதன், புவனேஸ்வரி இராதகிருஸ்ணன் உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், கல்விசாரா ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

இங்கு மாணவர்களினால் நாடகம், நடனம், வில்லுப்பாட்டு, கோலாட்டம், போன்ற கலை நிகழ்ச்சிகள் அரங்கேற்றம் செய்யப்பட்டன. அத்துடன், வாணிவிழாவை முன்னிட்டு நடைபெற்ற பேச்சுப்போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களின் ஆற்றுகைகளும் நடைபெற்றன. விசேட பூசை வழிபாடுகளை சிவஸ்ரீ ரதிகர சர்மா நிகழ்த்தினார்.

# சூரியனில் 2,00,000 கி.மீ. நீளமுள்ள இழை வெடிப்பு

## பூமிக்கு ஆபத்தாகும் சூரிய புயல்?



சூரியனில் 2,00,000 கிலோமீற்றர் நீளமுள்ள இழை வெடித்ததை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

சூரிய காந்தத்தின் நீண்ட இழை சூரியனின் தெற்கு அரைக்கோளத்தில் வெடித்துள்ளது. வெடிப்பிலிருந்து வரும் சிதறல்கள் பூமியை நோக்கி வரக்கூடும் என்று நிபுணர்கள் கணித்துள்ளனர் மற்றும் கண்காணிப்பு ஆய்வகங்கள், வெடித்த இடத்திலிருந்து கரோனல் மாஸ் எஜெக்ஷன் (CME) வெளிவருவதைக் குறிப்பிடுகின்றன.

இது பெரிய ஆற்றல்மிக்க மற்றும் அதிக காந்தமயமாக்கப்பட்ட பிளாஸ்மா மேகம் சூரியனிலிருந்து வெடிப்பு ஏற்பட்டு புவி காந்த புயல் உருவாகி பூமியில் ரேடியோ மற்றும் காந்த இடையூறுகளை ஏற்படுத்தும் ஒரு நிகழ்வாகும்.

புவி காந்த புயல் என்பது சூரிய எரிப்பு சக்திவாய்ந்த வெடிப்புகளாகும், இது ரேடியோ தகவல் தொடர்புகள், மின்சார கட்டடங்கள் மற்றும் விண்கல சமிக்ஞைகளை பாதிக்கலாம், விண்கலம் மற்றும் விண்வெளி வீரர்களுக்கு ஆபத்துகளை ஏற்படுத்தலாம். சூரிய மேற்பரப்பில் 1,30,000 கிலோமீற்றர்கள் முழுவதும் 10இற்கும் அதிகமான இருண்ட கருக்களைக்கொண்டுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை காலை சூரியனில் வெடிப்பு ஏற்பட்டது. ஒக்டோபர் 3 மற்றும் 4ஆம் திகதிகளிலிருந்து சூரியப் புயல் வெளியேறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உலக செய்திகள்

## ரயிலில் ஏறிய பச்சை வேற்றுகிரகவாசிகள்; பயணிகளை தாக்கி பணம் - நகை கொள்ளை



அமெரிக்காவின் பிரசித்திபெற்ற ரைம்ஸ் சதுக்கம் சுரங்க ரயிலுக்குள் ஏறிய ஆறு பெண்கள் அங்கிருந்த பயணிகளிடம் கொள்ளையடித்த வீடியோ வைரலாகியுள்ளது.

நியூயோர்க்கில் பச்சை வேற்றுகிரக வாசிகளைபோல் உடலை இறுக்கிய ஜம்ப்சூட் ஆடையில் வந்த ஆறு பெண்கள் அதிகாலை 2 மணியளவில் ரயிலில் தனியாக இருந்த 19 வயது பெண்ணைத் தாக்கி நகைகளையும் மற்றுமொரு பெண்ணிடமும் பணப் பையையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

## வேதியியலுக்கான நோபல் பரிசு:


# அமெ. - டென்மார்க் விஞ்ஞானிகள் மூன்று பேருக்கு பகிர்ந்தளிப்பு

2022ஆம் ஆண்டு வேதியியலுக்கான நோபல் பரிசு பெண் விஞ்ஞானி உட்பட 3 பேருக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

மருத்துவம், இயற்பியல், வேதியியல், பொருளாதாரம், அமைதி, இலக்கியம் ஆகிய துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

அமைதிக்கான நோபல் பரிசு நோர்வேயிலும், பிற துறைகளுக்கான நோபல் பரிசு சுவீடன் தலைநகர் ஸ்டோக்ஹோமிலும் அறிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் கே.பேரி ஷார்ப்லஸ், கரோலின் பெர்டோசி மற்றும் டென்மார்க்கின் மார்டென் மெல்டால் ஆகியோருக்கு உயிர் இயக்கவியலில் மூலக்கூறுகள் மற்றும் செல்களின் ஆய்வுக்காக இவ்வருடத்துக்கான வேதியியல்துறை நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.




விஞ்ஞானி பேரி ஷார்ப்லஸ் கடந்த 2001ஆம் ஆண்டும் வேதியியலுக்கான நோபல் பரிசை பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலக்கியத்துக்கான நோபல் பரிசு இன்றும் (வியாழக்கிழமை) பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு நாளையும் (வெள்ளிக்கிழமை) அறிவிக்கப்படவுள்ளன.

# ஏஞ்சலா மெர்க்கலுக்கு ஐ.நாவின் 'நன்சென்' விருது




சிரிய அகதிகளை மீள்குடியேற்றம் செய்ததற்காக ஐ.நாவின் விருதுக்கு ஜேர்மனியின் முன்னாள் அதிபர் ஏஞ்சலா மெர்க்கல் தெரிவாகியுள்ளார்.

ஐ.நாவின் அகதிகளுக்கான அமைப்பின் சார்பில் வழங்கப்படும் மதிப்புமிக்க 'நன்சென்' (nansen refugee award 2022) விருது ஏஞ்சலாவுக்கு வழங்கப்படுகிறது. 2015, 2016ஆம் ஆண்டுகளில் ஜேர்மனிக்கு வந்த இலட்சக்கணக்கான சிரிய அகதிகளுக்கு புகலிடமளித்து மனிதாபிமானத்துடன் பாதுகாத்ததற்காக இந்த விருது அவருக்கு வழங்கப்படுகிறது.


ஜெனீவாவில் எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ள விழாவில் இந்த விருது ஏஞ்சலா மெர்க்கலுக்கு வழங்கப்படவுள்ளது.

## ஈரானில் வலுக்கும் ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டம்:

# சிறுமியை கொலை செய்து உடலை திருடி புதைத்த பாதுகாப்புப் படையினர்

ஈரானில் இடம்பெற்றுவரும் ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்த 17 வயதுச் சிறுமியை அந்நாட்டு பாதுகாப்புப் படையினர் கொலை செய்து உடலைத் திருடி புதைத்துள்ளனர்.





இஸ்லாமிய மதச் சட்டங்களை கடுமையாக பின்பற்றிவரும் ஈரானில் பெண்கள் மற்றும் 9 வயதிற்கு மேற்பட்ட சிறுமிகள் இஸ்லாமிய மத உடையான ஹிஜாப் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.




இதனிடையே, அந்நாட்டின் தெஹ்ரானில் ஹிஜாப் சரியாக அணியவில்லை எனக் கூறி பொலிஸார் நடத்திய தாக்குதலில் கோமா நிலைக்குச் சென்ற 22 வயதான மாஹ்ஷா அமினி என்ற இளம்பெண் கடந்த மாதம் 17ஆம் திகதி உயிரிழந்தார்.

சம்பவத்தைக் கண்டித்து ஈரான் முழுவதும் பெண்கள் போராட்டத்தில் குதித்தனர். ஹிஜாப்பை கழற்றி வீசியும், தீ வைத்து எரித்தும் பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். போராட்டம் நாட்டின் பல நகரங்களுக்கு பரவிய நிலையில் போராட்டத்தை ஒடுக்க ஈரான் அரசு முயற்சித்து வருகிறது.

ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டத்தை ஒடுக்க பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் ஏற்பட்ட வன்முறையில் இதுவரை 133 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டம் ஈரான் அரசு மற்றும் அந்நாட்டு ஜனாதிபதி இப்ராஹிம் ரைசிக்கு எதிராக திரும்பியுள்ளது. பாடசாலை, கல்லூரி, பல்கலைக்கழக மாணவ, மாணவிகளும் ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டத்திற்கு ஆதரவாக களமிறங்கி வருவதால் நிலைமையை கட்டுப்படுத்த முடியாமல் ஈரான் அரசு திணறி வருகிறது.

செப்டெம்பர் 20ஆம் திகதி தெஹ்ரானில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளச் சென்ற 17 வயது சிறுமியொருவர் மாயமானார். அவரது பெயர் நிகா ஷகராமி. அந்தச் சிறுமியை ஈரானிய பாதுகாப்புப் படையினர் கொலை செய்துள்ளனர். பின்னர் அவரது உடலை பெற்றோரிடம் ஒப்படைத்தனர். அவரது உடலில் அவரது மூக்கு உடைக்கபட்டு, மண்டை ஓடு சிதைந்து இருந்துள்ளது. பின்னர் அவரது இறுதிச் சடங்கில் கூட்டம் கூடாமல் இருக்க அவரது உடலைத் திருடி இரகசியமாக புதைத்ததாக தற்போது குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

அதிகாரிகள் நிகா ஷகராமியின் உடலைக் கைப்பற்றி 40 கிலோமீற்றர் தொலைவிலுள்ள கிராமமொன்றில் இரகசியமாக புதைத்துள்ளனர் என்று பிபிசி பாரசீக வட்டாரங்கள் தெரிவித்தன.




# அழிந்துவரும் 72 அரிய வகை திராட்சைகளை உயிர்ப்பித்த விவசாயி



லெபனானைச் சேர்ந்த விவசாயியொருவர் தனது தோட்டத்தில் 72 அரியவகை திராட்சை வகைகளை பராமரித்து வருகிறார்.

திராட்சை தோட்டங்களுக்குப் பெயர்பெற்ற கஃபர்மிஷ்கி மலைப்பகுதியில் 4 தலைமுறைகளாக திராட்சை விவசாயத்தில் ஈடுபட்டுவரும் குடும்பத்தில் பிறந்த கமல் சைக்காளி என்பவர் அழிந்துவரும் திராட்சை இனங்களைப் பாதுகாக்கும் முயற்சியில் களமிறங்கியுள்ளார்.

ஒவ்வொரு வகைக்கும் 3 கொடிகள் வீதம் 72 ரக திராட்சைகளை தனது தோட்டத்தில் வளர்த்து வருகிறார்.

திருமண தேடல் விளம்பரங்களை
இலவசமாக பிரசுரித்துக்கொள்ள
அரிய வாய்ப்பு!

"உங்களுடைய அன்பான மகன் / மகளின் திருமணத்துக்கு பொருத்தமான துணையை தேடுகிறீர்களா? வட்ஸ்அப் ஊடாக எமக்கு விபரங்களை அனுப்பி வையுங்கள்!"



தமிழன் ஞாயிறு வார இதழில் வெளியாகும் விளம்பர பக்கத்தில் உங்களுடைய மகன் / மகளுடைய விபரங்களையும் எப்படியான துணையை தேடுகிறீர்கள் என்ற விடயத்தையும் தெளிவாக குறிப்பிட்டு (30 சொற்களுக்குக் குறைவாக) உங்களுடைய விலாசத்தை குறிப்பிட்டு கீழே உள்ள எமது வட்ஸ்அப் இலக்கத்துக்கு அனுப்பிவையுங்கள். இவற்றுக்கு எதுவித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது.

மேலதிக தகவல்களுக்கு
தொடர்புகொள்க : சுசி - 0115 886187

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைபேசி இல : 0115 200 900.
தொலைநகல் : 0112 673 442
வட்ஸ்அப் : 076 139 3805
thamilaneditor@gmail.com

விவாஹ்

# பாக். ஹோட்டலில் தண்ணீருக்குப் பதில் அசிட் விநியோகம்: பருகிய குழந்தை ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில்



பாகிஸ்தானில் உணவகமொன்றில் குடிநீருக்குப் பதில் அசிட் வழங்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் குறித்த உணவக மேலாளர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கடந்த மாதம் 27ஆம் திகதி முகமது அடில் என்பவர் தனது குடும்பத்தினருடன் பிறந்தநாள் கொண்டாட பொயட் என்ற உணவகத்திற்கு சென்றுள்ளார்.

அங்கு அவர்களுக்கு தண்ணீர்ப் போத்தலில் அசிட் வழங்கப்பட்டதாக கூறப்படும் நிலையில், தண்ணீர் என நினைத்து அசிட்டை பருகிய இரண்டரை வயது குழந்தை வைத்தியசாலையில் கவலைக்கிடமான நிலையில் சிகிச்சைபெற்று வருகிறது.

அசிட்டால் கை கழுவிய அடில்லின் உறவுக்கார சிறுவனுக்கு கையில் காயம் ஏற்பட்டுள்ள நிலையில், சிகிச்சைபெற்று வருகிறார். இது தொடர்பாக முஹம்மது அடில் அளித்த முறைப்பாட்டின்பேரில், உணவக மேலாளர் மற்றும் 5 ஊழியர்கள் மீது வழக்குப் பதிவு செய்த பொலிஸார், உணவக மேலாளரை கைதுசெய்துள்ளனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7